Registered as a news paper.
பக்கங்கள்: பன்னிரண்டு
விலை: ரூபா 8.00

நமது ஈழநாடு
தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

அசல் 22 கரட் தங்கத்தில்
நவீன காலத்திற்கேற்ப
புதிய டிசைன்களில்
தங்க நகைகளை
செய்து பெற்றுக்கொள்ள
சிறந்த ஸ்தாபனம்
சிறி கருமாரி நகையகம்
தங்கப்பவுண் நகை வியாபாரம்
205/6, கஸ்தூரியார் வீதி,
ராஜா தியேட்டர் கட்டிடம்,
யாழ்ப்பாணம். தொ:பே: 222 5385.

மலர்:03 திருவள்ளுவர் ஆண்டு: 2036 ஆவணி– 01 ஆம் நாள் ஹிஜ்ரி 1428 றஜபு 11 (17.08.2005) புதன்கிழமை இதழ்:321

# மோசமான நிலையை நோக்கி போர்நிறுத்த உடன்படிக்கை!



## உடன் சீர்செய்யவேண்டும் என்கிறார் தமிழ்ச்செல்வன்

லண்டன் —

போர்நிறுத்த உடன்பாடு மிகவும் மோசமான நிலையை நோக்கிச் சென்றுகொண்டிருக்கிறது. இந்த நிலைமையை உடனடியாகச் சீர்செய்ய வேண்டும். அரசாங்கமும் படைத்தரப்பும் அர்ப் பணிப்புடன் செயற்படும் சூழல் வராவிடின் நிச் சயமாக இந்தச் சூழலில் மாற்றம் ஏற்படாது என்று தமிழீழ அரசியற்துறைப் பொறுப் பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் எச்சரித்துள்ளார்.

பி.பி.சி. தமிழோசைக்கு வழங்கிய பேட்டியி லேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். இந்தப் பேட்டியில் அவர் மேலும் தெரிவித்ததாவது -

போர்நிறுத்த உடன்பாடு மிகமோசமான நிலையை நோக்கிச் சென்றுகொண்டிருக்கிறது. சீர்செய்யப்பட முடியாதளவுக்கு சம்பவங்கள் நடந்துகொண்டிருக்கின்றன.

எமது போராளிகளின் பாதுகாப்பு, மக்களுக்கு இயல்புநிலையை (11 ஆம் பக்கம் பார்க்க)

# லக்ஷ்மன் கதிர்காமரின் கொலையால் சமாதான முயற்சிகளுக்கு பின்னடைவு!



## நோர்வேத் தரப்பிடம் அரசாங்கம் தெரிவிப்பு

கொழும்பு —

தடைப்பட்டுள்ள சமாதான முயற்சிகளில் அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் கொலையை அடுத்து பாரிய பின்னடைவு ஏற்பட்டுள்ளதாக நோர்வே வெளியுறவு அமைச்சர் ஜான் பீற்றர்சனிடம் அரசாங்கத்தரப்பு தெரிவித்ததாக அரச சமாதான செயலகப்பணிப்பாளர் ஜயந்த தனபால தெரிவித்தார்.

நேற்றுமுன்தினமிரவு.ஜனதிபதி சந்திரிகாவை நோர்வே வெளியுறவு அமைச்சர் ஜான் பீற்றர்சன் தலைமையிலான குழுவினர்- (12 ஆம் பக்கம் பார்க்க)

# 12 ஆயிரத்து 700 பேருக்கு மீட்புநிதிக்கடன் மீளளிப்பு!

## நிதித்துறையினர் அறிவிப்பு

கிளிநொச்சி —

12 ஆயிரத்து 700 பேருக்கு தமிழீழ மீட்பு நிதிக்கடன் மீளளிப் புச் செய்யப்படவுள்ளதாக தமிழீழ விடுதலைப் புலிகளின் நிதிப் பொறுப்பாளர் யோ.தமிழ்க்குமரன் அறிவித்துள்ளார்.

குலுக்கல் மூலம் தெரிவுசெய்யப்பட்ட1200 பேருக்கும், மூப் பின் அடிப்படையில் தெரிவுசெய் யப்பட்ட 11 ஆயிரத்து 500 பேருக் குமாக - மொத்தம் 12 ஆயிரத்து 700 பேருக்கும் மீட்புநிதிக்கடன் மீளளிப்புச்செய்யப்படவுள்ளது.

கடன் மீளளிப்புக்குத் தெரிவுசெய்யப்பட்டோரின் விபரங்கள் நாளை முதல் தொடர்ச்சியாக வெளியிடப்படும்.

# ஹக்ரப் ஹொக்லன்ட் நாளை கிளிநொச்சிக்கு வருகிறார்!

கொழும்பு —

இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலைவர் ஹக்ரப் ஹொக்லன்ட் நாளை வன்னிக்கு விஜயம்செய்து தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுடன் பேச்சுக் களை நடத்தவுள்ளார்.

கிளிநொச்சியிலுள்ள விடுதலைப் புலிகளின் சமாதான செயல கத்தில் நாளை காலை 10 மணிக்கு இந்தச் சந்திப்பு இடம்பெறவுள்ளது.

கதிர்காமர் கொலை மற்றும் அதைத் தொடர்ந்து எழுந்திருக்

# கதிர்காமரின் இறுதிச்சடங்கின் பின் தேடுதல் நடவடிக்கைகள் தீவிரம்!



கொழும்பு—


நீதிமன்ற உத்தரவின்றி தேடுதல் நடத்து வது, சந்தேகநபர்களைக் கைதுசெய்வது, விசாரணையின்றித் தடுத்துவைத்தல், அமைச் சர் கதிர்காமரின் கொலையாளிகளை – சந்தேக



ஹக்ரப் ஹொக்லன்ட் நாளை வன்னிக்கு விஜயம்செய்து தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுடன் பேச்சுக்களை நடத்தவுள்ளார்.

கிளிநொச்சியிலுள்ள விடுதலைப் புலிகளின் சமாதான செயலகத்தில் நாளை காலை 10 மணிக்கு இந்தச் சந்திப்பு இடம்பெறவுள்ளது.

கதிர்காமர் கொலை மற்றும் அதைத் தொடர்ந்து எழுந்திருக்கும் புதிய சூழல், புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குச் செல்லும் வீதிகளை படையினர் மூடியமை, இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் புலிகளின் அரசியல் பணிக்கு விதிக்கப்பட்டிருக்கும் தடை உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்து இந்தச் சந்திப்பில் ஆராயப்படவுள்ளது.



கொழும்பு —

நீதிமன்ற உத்தரவின்றி தேடுதல் நடத்துவது, சந்தேகநபர்களைக் கைதுசெய்வது, விசாரணையின்றித் தடுத்துவைத்தல், அமைச்சர் கதிர்காமரின் கொலையாளிகளை - சந்தேக நபர்களை கைதுசெய்தல் போன்றவற்றுக்காகவே அவசரகாலச்சட்டம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் தயா ரத்னாயக்க தெரிவித்தார்.

இது தொடர்பாக (12 ஆம் பக்கம் பார்க்க)



# கருணா குழு உறுப்பினர் துப்பாக்கிச்சூட்டில் பலி!

பொலநறுவ —

பொலநறுவ மாவட்டத்திலுள்ள நாமல்பொக்குண என்ற இடத்தில் கருணா குழுவைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் நேற்றுமுன்தினம் மாலை சுட்டுக்கொல்லப்பட்டார்.

நேற்றுமுன்தினம் மாலை 5 மணியளவில் நாமல்பொக்குண என்ற இடத்தில் வயலுக்குச் சென்றுவிட்டுத் திரும்பியபோதே ராஜா பிரபு என்ற 17 வயது இளைஞர் இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டார். (12 ஆம் பக்கம் பார்க்க)

# அவசரகாலச் சட்டத்தை நீடிக்க நாடாளுமன்றம் நாளை கூடும்!

## ஜனாதிபதி சந்திரிகா அவசர நடவடிக்கை



கொழும்பு —

அவசரகாலச் சட்டத்தை ஒரு மாதத்துக்கு நீடிப்பதற்கான அங்கீகாரத்தைப் பெறுவதற்கும், அவசரகாலச் சட்டம் தொடர்பாக விளக்கமளிப்பதற்கும், அவசர நாடாளுமன்றக் கூட்டம் ஒன்றை நாளை கூட்டுவதற்கான அறிவித்தலை ஜனாதிபதி சந்திரிகா வெளியிட்டுள்ளார்.

நாளை நடைபெறவுள்ள இந்த விசேட கூட்டத்துக்கான அறிவித்தல் நேற்று முன்தினம் வெளியிடப்பட்ட விசேட வர்த்தமானியில் ஜனாதிபதி சந்திரிகாவால் அறிவிக்கப்பட்டிருந்தது. (12 ஆம் பக்கம் பார்க்க)

# இரண்டு பொலிஸார் மட்டக்களப்பில் காயம்!

மட்டக்களப்பு —

மட்டக்களப்பு - இருதயபுரம் சந்தியில் நேற்றிரவு 8.30 மணியளவில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவமொன்றில் இரண்டு பொலிஸார் காயமடைந்தனர்.

ஜெயந்திபுரம் பொலிஸ் நிலையத்திற்கு முன்னுள்ள காவலரணில் வீதிக் கடமையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோதே, துப்பாக்கிதாரி ஒருவர் மறைந்திருந்து இவர்களின்மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தார். (12 ஆம் பக்கம் பார்க்க)

# சினைப்பர் தாக்குதலில் லான்ஸ் கோப்ரல் பலி!

திருகோணமலை —

திருகோணமலை மாவட்டத்திலுள்ள மூதூர் - கெசலவத்த இராணுவமுகாமின் காவலரணில் பாதுகாப்புக் கடமையில் இருந்த இராணுவ லான்ஸ் கோப்ரல் ஒருவர் நேற்று சினைப்பர் தாக்குதலில் கொல்லப்பட்டார்.

நேற்று முற்பகல் 11.55 மணியளவில் நடத்தப்பட்ட இந்தத் தாக்குதலில் - மாத்தளை அங்குராங்கொடவைச் சேர்ந்த - 7 ஆவது இலகு காலாற் படைப்பிரிவில் பணியாற்றிய லான்ஸ் கோப்ரல் (12 ஆம் பக்கம் பார்க்க)

# இராணுவ வாகனம் மோதி வயோதிபப் பெண் படுகாயம்!

யாழ்ப்பாணம் —

இராணுவ வாகனம் மோதியதில் வயோதிபப் பெண் ஒருவர் படுகாயமடைந்த நிலையில், யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவருகிறார்.

நேற்றுக்காலை 11.30 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் - குருநகரைச் சேர்ந்த 65 வயதுடைய எஸ்.ராணி என்ற வயோதிபப் பெண்ணே படுகாயமடைந்தவராவார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது - யாழ் பொதுவிளையாட்டுக்கழக மைதானத்துக்கு முன்பாக சைக்கிளில் சென்ற மேற்படி பெண் மீது இராணுவத்தின் கன்ரர் வாகனம் மோதியது. இந்த விபத்தில் மேற்படி வயோதிபப் பெண் காலில் படுகாயமடைந்தார். இதனை அடுத்து சம்பவ இடத்திற்கு வருகை தந்த பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர்.

அத்துடன் - சம்பவம் நடந்த இடத்தில் மேலதிகமாக இராணுத்தினர் குவிக்கப்பட்டு பாதுகாப்புப்பலப்படுத்தப்பட்டிருந்தது. (12 ஆம் பக்கம் பார்க்க)

# போராளி ஒருவர் படையினரால் கைது!

அம்பாறை —

அம்பாறை - வெல்லாவெளிப் பகுதிப் பிரதேசத்தில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் வைத்து, விடுதலைப் புலிகளின் போராளி ஒருவரை விசேட அதிரடிப்படையினர் கைது செய்ததாக படை வட்டாரங்கள் தெரிவித்தன.

நிசாந்தன் என்ற போராளியே கைதானதாகவும் - மோட்டார் சைக்கிளில் சென்ற இவர் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் நடமாடிய காரணத்தை தெரிவிக்காததாலேயே கைது செய்யப்பட்டதாகவும் படைவட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

## தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் ஏற்பாட்டில்

# பாடசாலைகளின் தேவைகள் குறித்து வலயக்கல்வி அலுவலகத்தில் மாநாடு

யாழ்ப்பாணம் —

யாழ். குடாநாட்டு பாடசாலைகளில் நிலவும் அடிப்படைப் பிரச்சினைகள், மாணவர்களின் கல்வி அபிவிருத்தியை முன்னெடுத்துச் செல்வதற்கான தேவைகள் குறித்து உயர்மட்ட மாநாடு நேற்று யாழ். வலயக்கல்வி அலுவலகத்தில் நடைபெற்றது.

நேற்றுக்காலை 10 மணிக்கு ஆரம்பமான இந்த உயர் மாநாட்டில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பத்மினி சிதம்பரநாதன், மாவை சேனாதிராஜா, எம்.கே.சிவாஜிலிங்கம், மு.சிவனேசன், செ.கஜேந்திரன் ஆகியோரும், யாழ். வலயக் கல்விப்பணிப்பாளர் வே.தி.செல்வரத்தினம், வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா, வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் மற்றும் தென்மராட்சி, தீவகம் ஆகியவற்றின் வலயக் கல்விப் பணிப்பாளர்களும் கலந்துகொண்டனர்.

குடாநாட்டு பாடசாலைகளில் இதுவரை இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட ஆசிரியர்களின் வெற்றிடங்கள் நிரப்பப்படாதிருப்பதாக சுட்டிக்காட்டப்பட்டது.

அத்துடன் இரவு, பகல் நேரங்களில் பாடசாலைகள் மற்றும் வலயக் கல்வி அலுவலகங்களில் கடமையாற்றுவதற்கு சிற்றூழியர்களின் பற்றாக்குறை பெரும் பிரச்சினையாக இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

அத்துடன் பாடசாலைகளில் நிலவும் இட வசதி, தளபாடங்களின் பற்றாக்குறை, கட்டட வசதிகள் போதியளவு இன்மையால் மர நிழல்களில் இருந்து கற்கவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருப்பதாகவும் தெரியவருகிறது.

குடிநீர், மலசலகூட வசதிகள், சுகாதார வசதிகள் இல்லாமை உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகள் தொடர்பாக பிரஸ்தாபிக்கப்பட்டது.

நாட்டிலுள்ள பாடசாலைகளில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பாக ஜனாதிபதி - நாடாளுமன்ற உறுப்பினர்களைச் சந்தித்து கலந்துரையாடிய போது, வடக்கு - கிழக்கு பாடசாலைகளின் நிலைமைகள் தொடர்பாக எதிர்வரும் 24 ஆம் திகதி பிரத்தியேகமாக ஆராய்வதாக கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குத் தெரிவித்திருந்தார்.

இதனையடுத்து குடாநாட்டு பிரச்சினைகள் தொடர்பாக வலயக் கல்விப் பணிப்பாளர்களிடம் கேட்டறிந்த கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எதிர்வரும் 24 ஆம் திகதி ஜனாதிபதி சந்திரிகாவை சந்திக்கும் போது பாடசாலைகளில் நிலவும் குறைபாடுகள், தேவைகள் தொடர்பாக சேகரித்த தகவல்கள் அடங்கிய அறிக்கையொன்றை சமர்ப்பிப்பர் எனத் தெரியவருகிறது.

# மெதடிஸ்த திருச்சபையினரால் கடற்தொழில் உபரணங்கள் அன்பளிப்பு

பருத்தித்துறை —

சுனாமியால் பாதிக்கப்பட்ட வடமராட்சி மீனவர்களுக்கு பருத்தித்துறை மெதடிஸ்த திருச்சபையால் கடற்தொழில் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

நேற்று பொலிகண்டி கிழக்கில் 20 கடற்தொழிலாளருக்கு தலா 35 ஆயிரம் ரூபா பெறுமதியான கட்டுமரம், வலை போன்றவை உள்ளிட்ட கடற்தொழில் உபகரணங்கள் யாழ். கிறிஸ்தவ ஒன்றியத்தின் உதவியுடன் பருத்தித்துறை மெதடிஸ்த திருச்சபையால் வழங்கப்பட்டன.

நேற்றுமுன்தினம் பலாலி கடற்தொழிலாளர் சங்கத்தைச் சேர்ந்த 60 மீனவர்களுக்கு ஒவ்வொருவருக்கும் தலா 40 ஆயிரம் ரூபா பெறுமதியான கட்டுமரம், வலை உள்ளிட்ட கடற்தொழில் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

(20)

# சுப்பிரமணியம் முன்பள்ளி விளையாட்டு விழா!

யாழ்ப்பாணம் —

கந்தரோடை ஸ்ரீ சுப்பிரமணியம் முன்பள்ளியின் விளையாட்டு விழா எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பி.ப 1.30 மணிக்கு ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்து.

நிலையத்தலைவர் அ.தற்பரானந்தனின் தலைமையில் நடைபெறும் இந்த பாலர் விளையாட்டு நிகழ்வுகளுக்கு யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் பிரதம விருந்தினராகவும், உடுவில் கோட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.பா.பவநிதன், ஸ்கந்தவரோதயக் கல்லூரி உப அதிபர் இ.ஜோர்ஜ் ஆகியோர் கௌரவ விருந்தினராகவும் கலந்துகொள்ளவுள்ளனர்.

(101)

# கணித, விஞ்ஞானப் போட்டி செப்ரெம்பர் 10 இல் ஆரம்பம்

யாழ்ப்பாணம் —

வடக்கு - கிழக்கு மாகாணமட்ட கணித, விஞ்ஞான போட்டி அடுத்த மாதம் 10ஆம் திகதி திருகோணமலை சென்.ஜோன்ஸ் கல் லூரியில் ஆரம்பமாகவுள்ளது.

இந்தப் போட்டி மறுநாள் ஞாயிற்றுக்கிழமையும் நடைபெறவுள்ளதாக மாகாண கல்வி அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

மாவட்டமட்ட கணித, விஞ்ஞானப் போட்டிகளில் தெரிவுசெய்யப்பட்ட மாணவர்கள் இந்தப் போட்டியில் பங்குபற்றவுள்ளனர்.

மாகாணமட்ட கணிதப் போட்டி 10 ஆம் திகதியும், விஞ்ஞானப் போட்டி 11 ஆம் திகதியும் நடைபெறவுள்ளது.

இந்தப் போட்டிக்கு தெரிவான மாணவர்கள் அனைவரையும் போட்டிக்குத் தயாராகு மாறு யாழ். வலயக் கல்வி அலுவலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## க.பொ.த.சாதாரணதரப் பரீட்சை

# விடைத்தாள்களை வலயங்களில் திருத்த பரீட்சை ஆணையாளர் இணக்கம்!

யாழ்ப்பாணம் —

இந்த ஆண்டு டிசெம்பர் மாதம் நடைபெறவுள்ள க.பொ.த சாதாரண தரப் பரீட்சை விடைத்தாள்களை யாழ். குடாநாட்டிலுள்ள வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம் ஆகிய வலயக் கல்வி அலுவலகங்ளுக்குட்பட்ட பாடசாலைகளில் திருத்துவதற்கு பரீட்சை ஆணையாளர் அனுர எதிரிசிங்க இணக்கம் தெரிவித்தார்.

க.பொ.த.சாதாரண தரப்பரீட்சை விடைத்தாள்கள் திருத்தும் பணியில் ஈடுபடும் ஆசிரியர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்தின் குழுவினர், பரீட்சை ஆணையாளர் அனுர எதிரிசிங்க, உதவிப்பரீட்சை ஆணையாளர் ஏ.எஸ்.மொகமட் மற்றும் ஏ. டபிள்யூ.குணசேகர ஆகியோரை சந்தித்து ஆசிரியர்களின் பிரச்சினைகள் தொடர்பாக தெரியப்படுத்தியதை அடுத்து, குடாநாட்டிலுள்ள மூன்று வலயங்களிலும் விடைத்தாள்களை திருத்துவதற்கு இணக்கம் தெரிவிக்கப் பட்டது.

எதிர்வரும் டிசெம்பர் மாதம் நடைபெறவுள்ள விடைத்தாள் மதிப்பீட்டு வேலைகளை மேற்படி வலயங்களில் நடத்துவதில் உள்ள நெருக்கடி நிலைகள், எந்தப் பாடசாலைகளில் மதிப்பீட்டு வேலைகளை நடத்துவது, இதன் போது தேவைப்படும் வசதிகள் தொடர்பான விபரங்கள் வலய ரீதியாக சேகரிக்கப்படவுள்ளது.

வலிகாமம் வலயத்தைச் சேர்ந்த ஆசிரியர்கள் இன்றும், நாளையும் பிறபகல் 2 மணிக்கு இராமநாதன் கல்லூரியிலும், தென்மராட்சி ஆசிரியர்கள் வியாழன், வெள்ளி பிற்பகல் 2 மணிக்கு தென்மராட்சி வலயத்திலும் தொடர்புகொள்ள முடியும்.

அத்துடன், வடமராட்சி வலயப் பாடசாலைகளைச் சேர்ந்த ஆசிரியர்கள் பிரதிக் கல்விப்பணிப்பாளர் எஸ். இராசேந்திரத்துடன் தொடர்புகொள்ளுமாறு இலங்கை ஆசிரியர் சங்கத்தின் யாழ். மாவட்ட செயலாளர் அ. பாலச்சந்திரன் தெரிவித்தார்.

# சில்லாலை - சாந்தை கிராமத்தில் சட்டவிரோத மின்பாவனை அதிகரிப்பு

யாழ்ப்பாணம் —

சில்லாலை வடக்கு - சாந்தை கிராமத்தில் சட்டவிரோதமாக மின்சாரம் பெறுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக இலங்கை மின்சார சபையின் பிரதம பொறியியலாளர் தெரிவித்தார்.

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட சாந்தை கிராமத்தில் சுமார் 90 இற்கு மேற்பட்ட குடும்பங்கள் சட்டவிரோதமாக மின்சாரம் பெற்று வருகின்றன. இந்தச் சட்டவிரோத மின்சாரப் பாவனையைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளைத் தாம் மேற்கொண்டு வருவதாகவும், இந்த விடயத்தில் மக்களின் ஒத்துழைப்பும் அவசியமானது எனவும் தெரிவித்தார்.

இதுவரை மின்சாரம் பெற விண்ணப்பிக்காத கிராம மக்கள் உடனடியாக விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கும்படியும் கேட்டுள்ளார்.

விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகளுக்கு விரைவாக மின்சாரம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என மின்சாரப் பொறியியலாளர் மேலும் தெரிவித்தார். (44)

# ஆசிரியர்களுக்கான செயலமர்வு

யாழ்ப்பாணம் —

யாழ். மாவட்ட பாடசாலைகளில் தரம் 12 மாணவருக்கு தகவல் தொழில்நுட்பக் கல்வி கற்பிக்கின்ற ஆசிரியர்களுக்கான செயலமர்வு இன்று பிற்பகல் 2.30 மணிக்கு யாழ். கல்வி வலயத்தில் நடைபெறவுள்ளது.

தகவல் தொழில்நுட்பக் கல்வி கற்பிக்கின்ற ஆசிரியர்களுடன் குறித்த பாடம் தொடர்பாக கலந்துரையாடவிருப்பதால் மேற்படி பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களைத் தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்தார்.

# மிதிவெடியால் பாதிக்கப்பட்டோருக்கு கடன் வழங்கும் நிகழ்வு இன்று!

யாழ்ப்பாணம் —

மிதிவெடி செயற்பாட்டு வாரத்தை முன்னிட்டு மிதிவெடியால் பாதிக்கப்பட்டவர்களுக்கான கடன் வழங்கும் நிகழ்வு இன்று முற்பகல் 10 மணிக்கு யாழ்ப்பாணம் சுண்டுக்குளியில் அமைந்துள்ள சர்வோதய மாவட்ட நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் மேலதிக அரசாங்க அதிபர் ஆ.சிவசுவாமி பிரதம விருந்தினராகவும், மாவட்ட மிதிவெடி செயற்பாட்டு அலுவலகத்தைச் சேர்ந்த ரி.எல்மோ ஆனந்தராசா, யுனிசெப் திட்ட அலுவலர் தி.ஸ்ரீஸ்கந்தராசா, யாழ்.செயலக மிதிவெடி அபாய கல்வித் திட்ட இணைப்பாளர் தி.சிவனேசசிங்கம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்துகொள்வர்.

# நலன்புரி சங்கத்தின் பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம் —

சண்டிலிப்பாய் பிரதேச செயலக நலன்புரிச் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் எதிர்வரும் 24 ஆம் திகதி புதன்கிழமை காலை 11.30 மணிக்கு சங்கத் தலைவர் எம்.பாலசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

சண்டிலிப்பாய் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற இருக்கும் இந்தக் கலந்துரையாடலில் 2005/2006 ஆம் ஆண்டுக்கான புதிய நிர்வாகசபை உறுப்பினர்கள் தெரிவும், சென்ற நிதியாண்டுக்கான வரவு - செலவு திட்ட அறிக்கை மற்றும் சங்கத்தின் வளர்ச்சி செயற்பாடுகள் என்பன விரிவாக ஆராயப்படவுள்ளதால், அனைத்து அங்கத்தவர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறும் தெரிவிக்கப்படுகிறது. (44)

# நல்லூரில் இன்று

மானிப்பாய் —

வரலாற்றுச் சிறப்பு மிக்க நல்லூர் கந்தன் ஆலயத் திருவிழாவை முன்னிட்டு, நல்லூர் இளங்கலைஞர் மன்றம் - தெல்லிப்பளை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் ஆதரவுடன், நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் இன்று மாலை 6.30 மணிக்கு, எஸ்.சிவஞானராஜாவின் பாட்டு இடம் பெறும்.

இந்த நிகழ்வில் - வயலின் - வி. மதுரா, மிருதங்கம் - எஸ்.வரதராஜ சர்மா, முகர்சிங் - எஸ்.விமல்சங்கர் ஆகியோர் இசைக்கவுள்ளனர். (100)

# வரலட்சுமி விரதம்

யாழ்ப்பாணம் —

வரலட்சுமி விரதத்தை முன்னிட்டு - கொக்குவில், நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலயத்தில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 8 மணிமுதல் அபிஷேகமும் இதனைத் தொடர்ந்து விஷேட பூசைகளும் இடம்பெறும்.

மாலை 4.30 மணிமுதல் வெள்ளிக்கிழமை உற்சவமும், அதனைத் தொடர்ந்து வரலட்சுமி விரதகாரர்களுக்கான காப்பு வழங்கும் நிகழ்வும் இடம்பெறும். வரலட்சுமி காப்பு பெற விரும்பும் அடியார்களின் பெயர்கள் பதிவு செய்யப்பட்டுவருவதாக ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்தனர்.

# ஒருங்கிணைப்பு கூட்டம்!

யாழ்ப்பாணம் —

யாழ். மாவட்ட விவசாயக் குழுக் கூட்டம் எதிர்வரும் 25 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 10 மணிக்கு அரச அதிபர் கே.கணேஸ் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் முக்கிய விடயங்கள் கலந்துரையாடப்படவிருக்கின்றது. எனவே இந்தக் கூட்டத்திற்கு சகல விவசாயக் குழு பிரதிநிதிகளையும் கலந்துகொள்ளுமாறு யாழ். அரச அதிபர் அறிவித்துள்ளார்.


## விற்பனைக்கு

எமது நிறுவனத்தில் ஒரு தொகை திரும்பிய பத்திரிகை விற்பனைக்கு உள்ளது. விரும்புவோர் அலுவலக நேரத்தில் நேரில் தொடர்பு கொள்ளவும்.

நிர்வாகம்
நமது ஈழநாடு
267, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.



மனோகரா யாழ்ப்பாணம்
19 ஆம் திகதிவரை
இலங்கையிலும் இந்தியாவிலும்ஒரேதின வெளியீடு
மாதவன், சதா மற்றும் பலர் நடித்த
பிரியசகி

20 ஆம் திகதிமுதல் அநேகரின் வேண்டுகோளுக்கிணங்க
அந்நியன்
காட்சி நேரம் : (பு.நே) 10.30, 2.30, 6.30, 9.30



நிறைஞ்சனாஸ் சங்கானை
பிரசாந்த், சிம்ரன் மற்றும் பலர் நடித்த
தமிழ்
காட்சிகள் : 11.00, 2.45, 6.00 (பு.நே)



நாதன்ஜீ யாழ்ப்பாணம் (குளிரூட்டப்பட்டது)
இன்னும் சில நாட்கள்
அக்சன் கிங் அர்ஜுன், சிநேகா நடித்த

சின்னா
காட்சிகள் : 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)



நாகம்ஸ் சுன்னாகம்
இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரே தின
ஜெயம்ரவி, ரேணுகாமேனன், வடிவேலு மற்றும்

தாஸ்
காட்சிகள்:- 11.00,3.00, 7.00,10.00 (பழைய நேரம்)



## சிறு விளம்பரம்

### வீடு வாடகைக்கு

யாழ். கந்தர்மடத்தில் நான்கு அறைகள் கொண்ட கீழ் வீடு (Attached bathroom) வாடகைக்கு உண்டு. தொடர்பு:- 0713056757 (2018)



ராஜா யாழ்ப்பாணம்
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடு! காதல் புகழ் பரத், ரேணுகா மேனன்
பெப்ரவரி 14

பு.நே: 10.30, 2.30, 6.30, 9.30


## கண்ணீர் பூக்கள்



### திருமதி பரிமளம் அன்னலிங்கம்


15.05.2005 அன்று காலமான திருமதி பரிமளம் அன்னலிங்கம் (அதிபர் அரியாலை கிழக்கு தமிழ்க்கலவன் பாடசாலை) அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு வேதனை அடைவதுடன், அவரது பிரிவால் துயருறும் குடும்பத்தினர்க்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

மகேஸ்வரன், ரவி (பிரான்ஸ்),
ஜெசிதரன், ரோசன், ஜெயபிரசாத்,
ஜெகவிந்தன் (மருமக்கள்)

(2019)

# கிழக்கில் தொடரும் கொலைகளுக்கு அரசாங்கமே முழுப்பொறுப்பு!

## ஜோசப் பரராஜசிங்கம் எம்.பி.



கொழும்பு—

கிழக்கில் இடம்பெற்றுவரும் கொலைகளுக்கு அரசே பொறுப்பு என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் தெரிவித்தார். வெளிநாட்டு வானொலி ஒன்றுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

முக்கியமாகக் கிழக்கு மாகாணத்தில் இடம்பெற்றுவருகின்ற கொலைகளுக்கு அரசாங்கமே பொறுப்பு என்று கூறவேண்டும். யுத்தநிறுத்த ஒப்பந்தத்தின் எட்டாவது சரத்தில் முதலாவது பந்தியில் கூறியிருப்பதுபோன்று, அந்த யுத்தநிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட 30 நாட்களுக்குள் ஆயுதக்குழுக்களிடமிருந்து ஆயுதங்கள் களையப்பட்டிருந்தால், இதுபோன்ற கொலைகள் கிழக்கு மாகாணத்தில் இடம்பெற்றிருக்காது. விடுதலைப்புலிகளும் இதைத்தான் நோர்வே நாட்டு பிரதிநிதிகளூடாக அரசுக்குத் தெளிவுபடுத்தியுள்ளனர். அத்துடன் கண்காணிப்புக் குழுவினரிடனும் பலமுறை முறையிட்டுள்ளனர்.

இது தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கூட நாடாளுமன்றத்தில் தெளிவுபடுத்தியுள்ளது. எனவே, யுத்தநிறுத்த ஒப்பந்தத்தின்படி அந்த எட்டாவது சரத்தின் முதலாவது பகுதியை உடனடியாக அரசு காலதாமதமானாலும் அதனை நிறைவேற்ற முன்வரும் பட்சத்தில் கிழக்கில் இடம்பெற்றுவரும் கொலைகள் கண்டிப்பாக நிறுத்தப்படும் என்றார்.

# அன்பு இல்ல பொறுப்பாளர் திருமலையில் கடத்தப்பட்டார்

திருகோணமலை—

மூதூர் பிரதேச கட்டப்பறிச்சான் கிராமத்தைச் சேர்ந்தவரும், திருகோணமலை 'அன்பு' இல்லத்தின் முன்னாள் பொறுப்பாளரும், திருகோணமலை மாவட்ட இந்து இளைஞர் பேரவைத் தலைவருமாகிய சுந்தரலிங்கம் கடந்த 11ஆம் திகதி வியாழக்கிழமை தமிழ் இளைஞர் ஒருவரால் கடத்திச் செல்லப்பட்டுள்ளார்.

இவரது மோட்டார் சைக்கிள் ஓட்டமாவடியில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இது வரையில் இவர் விடுதலை செய்யப்படவில்லை.

இவர் கடத்திச் செல்லப்படுவதற்கு இரண்டு நாட்களுக்கு முன்னர் பதினாறு லட்சம் ரூபா பெறுமதியான அன்பு இல்லத்துக்குச் சொந்தமான காசோலை மற்றும் பல முக்கிய ஆவணங்களும் காணாமற்போயிருந்தன.

இந்த ஆவணங்களை மீட்டுத்தருவதாகக் கூறியே இவர் கடத்தப்பட்டு - பின் முஸ்லிம் இளைஞர்களிடம் ஒப்படைக்கப்பட்டதாகவும் தெரியவருகிறது. (01)

## சுதந்திரக்கட்சி அமைப்பாளர் நியமனம்

திருகோணமலை—

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் திருகோணமலை மாவட்ட அமைப்பாளராக கந்தையா கிருபைராஜா நியமிக்கப்பட்டுள்ளார். கடந்த 8 ஆம் திகதி இதற்கான உத்தியோகபூர்வ கடிதத்தை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தனக்கு வழங்கியதாக - கந்தையா கிருபைராஜா தெரிவித்தார். (01)

# 'தாயகமே தாகம்' எழுச்சி நிகழ்வு நாளை சுவிட்சர்லாந்தில்!




சூரிச்—

'தாயகமே தாகம்' என்ற எழுச்சி நிகழ்வு நாளை சுவிட்சர்லாந்தில் புலம்பெயர்ந்து வாழும் தமிழ்மக்களால் முன்னெடுக்கப்படவுள்ளது.

சுவிட்சர்லாந்து நேரம் நண்பகல் ஒரு மணிக்கு பேர்ணில் உள்ள நாடாளுமன்ற கட்டடத்துக்கு முன்னாள் கூடும் புலம்பெயர்ந்து வாழும் தமிழ்மக்கள் - தமிழர் தன்னாட்சியுடன் வாழ வழி செய் அல்லது பிரிந்துபோவதை அங்கீகரி என்ற தொனிப் பொருளில் இந்த எழுச்சி நிகழ்வை நடத்தவுள்ளனர்.

தமிழர் தாயகத்தில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் பேரெழுச்சியின் தொடர்ச்சியாக பொது அமைப்புகள், கல்விக் கூடங்கள், மன்றங்கள், கழகங்கள், ஆலயங்கள் மற்றும் வியாபார நிறுவனங்களும் மற்றும் அனைத்துத் தமிழ்மக்களும் பேரெழுச்சியுடன் நாடாளுமன்றத்துக்குமுன் ஒன்றுகூடவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# சேது சமுத்திரத் திட்டத்துக்கு எதிராக கொழும்பில் இரு ஆர்ப்பாட்டங்கள்!

கொழும்பு—

சேது சமுத்திரத் திட்டத்துக்கு எதிராக, அடுத்தவாரம் இரண்டு ஆர்ப்பாட்டங்கள் கொழும்பில் இடம்பெறவுள்ளன. சேது சமுத்திரத் திட்டத்துக்கு எதிரான மக்கள் இயக்கமும், சேது சமுத்திரத் திட்டத்துக்கு எதிரான தேசிய இயக்கமும் இந்த ஆர்ப்பாட்டங்களை ஒழுங்குசெய்துள்ளன.

சேது சமுத்திரத் திட்டத்துக்கு எதிரான மக்கள் இயக்கம் நேற்று நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டின்போது, எதிர்வரும் 23 ஆம் திகதி இந்திய தூதரகம் முன்பாக ஆர்ப்பாட்டம் நடத்தப்போவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தால் இலங்கையின் கடற்பரப்புக்கு பாரிய சுற்றுச்சூழல் பாதிப்பும், பொருளாதாரப் பாதிப்பும் ஏற்படும் என அதன் இணை அமைப்பாளர் ரி.தம்பையா தெரிவித்தார்.

மீனவ மக்களின் பங்குபற்றலோடு சேது சமுத்திரத் திட்டத்துக்கு எதிரான தேசிய இயக்கம்- எதிர்வரும் 24 ஆம் திகதி கோட்டை புகையிரத நிலையம் முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடவுள்ளதோடு, இந்தியத் தூதரகம் வரை சென்று தூதுவரிடம் மகஜர் ஒன்றையும் கையளிக்கவுள்ளதாகவும் - கட்சி பேதங் கள் இன்றி சேது சமுத்திரத் திட்டத்துக்கு எதிராக இலங்கையர்கள் ஒன்றுபட வேண்டுமெனவும் அதன் அமைப்பாளர் சுரஞ்சன் கொடித்துவக்கு கேட்டுள்ளார். (01)

## தேர்தல் ஆணையாளரால்

# நீதிமன்றுக்கு சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை மக்களுக்கு கிடைத்த பெரும் வெற்றியே!

## திஸ்ஸ அத்தநாயக்க கூறுகிறார்

கொழும்பு—

தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்கா நீதிமன்றுக்கு வழங்கிய ஜனாதிபதித் தேர்தல் காலம் தொடர்பான அறிக்கை, மக்களின் வெற்றி என ஐக்கிய தேசியக்கட்சி தெரிவித்தது.

அந்தக் கட்சியின் பிரதிப் பொதுச்செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க இது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையில் -

இந்த அரசாங்கம் இறைமையைப் பறித்துக்கொள்ள முயன்றது. அரசியல் அமைப்பின்படி தேர்தல் ஆணையாளருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் படியே இந்த அறிக்கை நீதிமன்றுக்கு வழங்கப்பட்டுள்ளது.

1999 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற்ற ஜனாதிபதி - பதவிப் பிரமாணம் செய்ததைத் தான் ஏற்றுக்கொண்டுள்ளதாகத் தேர்தல் ஆணையாளர் நேற்றுமுன்தினம் ஏற்றுக்கொண்டார்.

இதேவேளை, தேர்தல் ஆணையாளரின் கூற்றுத் தொடர்பாக அரசின் நிலைப்பாடு குறித்து அரசாங்கத்தின் பேச்சாளர் நிமால் சிறிபால டி சில்வா மற்றும் அரசியல் அமைப்பு விவகார அமைச்சர் டீ.யூ.குணசேகர ஆகிய இருவரும் கருத்துக்கூறுகையில் -

நீதிமன்றம் தேர்தலை நடத்தும் தினம் தொடர்பான தீர்ப்பை அறிவிக்கும்வரை தம்மால் கருத்துத் தெரிவிக்க முடியாது எனத் தெரிவித்தனர். (01)

# உயிர் அச்சுறுத்தல் காரணமாக விடுமுறை எடுத்த கதிர்காமர்!

கொழும்பு—

மறைந்த வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் தனது உயிருக்கு ஏற்பட்டிருந்த அச்சுறுத்தல் காரணமாக ஓகஸ்ட் மாதம் முழுவதும் நாடாளுமன்றித்திலிருந்து விடுமுறை எடுத்திருந்தார் என- வரத்தக விவகார அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே தெரிவித்தார்.

கடந்த 8ஆம் திகதி தொலைபேசி மூலம் தன்னைத் தொடர்பு கொண்ட வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர், இந்த மாதம் முழுவதும் தனது வாழ்வில் அசம்பாவிதங்களை ஏற்படுத்தக்கூடிய தீமையான காலம் நிலவுவதாகவும் -அதனால் இந்த மாதம் முழுவதும் நாடாளுமன்றம் வரப்போவதில்லை என்றும் தெரிவித்தார்.

அமைச்சர் கதிர்காமரின் வெளிநாட்டுப் பயணங்கள் குறித்து நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் அளுவிஹாரே எழுப்பியுள்ள கேள்விகளுக்கு தன்சார்பில் பதிலளிக்குமாறு அமைச்சர் கேட்டுக்கொண்டதாகவும், சபாநாயகரிடமும் விடுமுறைக்கு விண்ணப்பித்துள்ளதாக அவர் தெரிவித்தார் என்றும் அமைச்சர் பெர்னாண்டோ புள்ளே மேலும் கூறினார். (01)

# பகுதி நேர ஆங்கில ஆசிரியர்களுக்கு ஒக்ரோபருக்கு முன் நியமனம்!

கொழும்பு—

வடக்கு - கிழக்கில் ஒப்பந்த அடிப்படையில் கடமையாற்றும் ஆங்கில ஆசிரியர்கள் அனைவருக்கும் ஒக்ரோபர் 15 ஆம் திகதிக்கு முன்னர் நிரந்தர நியமனத்தை வழங்க நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க - கல்வி அமைச்சின் அதிகாரிகளை பணித்துள்ளார்.

வடக்கு - கிழக்கு மாகாணக் கல்விப்பணிப்பாளர் வி.விசாகலிங்கம் இந்தத் தகவலை தெரிவித்துள்ளார்.

கடந்த வாரம் நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் வடக்கு-கிழக்கின் கல்விப் பிரச்சினை பற்றி ஆராயப்பட்ட கூட்டத்தில் ஜனாதிபதி சந்திரிகா அதிகாரிகளை இவ்வாறு பணித்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. ஒப்பந்த அடிப்படையில் கடமையாற்றிய 230 ஆங்கில ஆசிரியர்களுக்கு சமீபத்தில் நிரந்தர நியமனம் வழங்கப்பட்டது. இன்னும் 500 பேர்வரை எஞ்சி இருக்கிறார்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

# கதிர்காமரின் வீட்டைப் படம்பிடித்த இளைஞர்களின் விளக்கமறியல் நீடிப்பு

கொழும்பு—

படுகொலை செய்யப்பட்ட லக்ஷ்மன் கதிர்காமரின் வீட்டைப் புகைப்படம் எடுத்தார்கள் என்ற சந்தேகத் தின்பேரில் கைதுசெய்யப்பட்ட இரு தமிழ் இளைஞர்களையும், எதிர்வரும் 29 ஆம் திகதிவரை தொடர்ந்து விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு பிரதான நீதிவான் குசல சறோஜினி வீரவர்த்தன உத்தரவிட்டார்.

பதுளை மற்றும் பஸறை பிரதேசங்களைச் சேர்ந்த மாணிக்கம் தமிழினியன் மற்றும் ரங்கன் ஜனகன் ஆகிய இருவருமே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

முறைப்பாட்டாளர் சார்பில் ஆஜராகி அறிக்கை ஒன்றைத் தாக்கல்செய்த கொழும்பு குற்றப் புலனாய்வுப்பிரிவு உப பொலிஸ் பரிசோதகர் - சந்தேகநபர்களிடம் ஏற்கனவே வாக்குமூலங்கள் பெறப்பட்டபோதிலும் -லக்ஷ்மன் கதிர்காமரின் கொலையையடுத்து இவர்களிடம் மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாகத் தெரிவித்தார்.

இந்த இருவருக்கும் பயங்கரவாத நடவடிக்கைகளுடன் தொடர்பிருப்பதாகத் தகவல்கள் கிடைத்துள்ளதால், சந்தேக நபர்களைத் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்குமாறு அவர் நீதிவானைக் கேட்டுள்ளார்.

இந்த இருவரிடமும் உரிய விசாரணைகளை நடத்துமாறு கூறிய நீதிவான், விசாரணைகளை விரைவாக மேற்கொள்ளுமாறு கொழும்பு குற்றப் புலனாய்வுக்குத் தெரிவித்துள்ளார். சந்தேகநபர்கள் இருவரையும் எதிர்வரும் 29 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறும் உத்தரவிட்டார். (01)

# கதிர்காமர் கொலை தொடர்பான விசாரணைகள் விரிவாக்கம்!

கொழும்பு—


வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் கொலை தொடர்பான விசாரணைகளை விரிவாக்க பொலிஸ் திணைக்களம் முடிவுசெய்துள்ள இரகசியக் பொலிஸ் மற்றும் கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவுப் புலனாய்வுப்பிரிவு என்பன விசாரணைகளை நடத்திவருவதாக பொலிஸ் மா அதிபர் சந்திரா பெர்னான்டோ அறிவித்துள்ளார்.

கொழும்பு நகரை மையப்படுத்தி இடம்பெறும் சோதனை நடவடிக்கைகள் இன்றைய தினமும் இடம்பெறும். கொலை தொடர்பாக நேற்றுமுன்தினம் அதிகாலை வரை 45 பேர் கைது செயயப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கைகளின்போது 28 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.


பம்பலப்பிட்டி, தெஹிவளை, களனி, வெள்ளவத்தை, முகத்துவாரம், புறக்கோட்டை, கிராண்ட்பாஸ், மருதானை, வத்தளை, கொட்டாஞ்சேனை மற்றும் கோட்டைப் பகுதிகளில், சந்தேகத்தின்பேரில் கைதுசெய்யப்பட்ட இவர்களில் 8 பேர் விடுதலை செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (01)

# ஆஷஸ் 3ஆவது டெஸ்ட் போட்டியில் நூலிழையில் தப்பியது அவுஸ்ரேலியா!



மான்செஸ்டர்—

ஆஷஸ் கிரிக்கெட் தொடரின் 3ஆவது டெஸ்ட் போட்டியில் நூலிழையில் தோல்வியிலிருந்து தப்பியது அவுஸ்ரேலியா. 423 ஓட்டங்களைச்



சேர்த்தால் வெற்றி என்ற நிலையில் இரண்டாவது இனிங்ஸை ஆடிய அவுஸ்ரேலியா ஆட்டநேர இறுதியில் 9 விக்கெட் இழப்புக்கு 371 ஓட்டங்களைச் சேர்த்து தோல்வியைத் தவிர்த்தது.

கப்டன் ரிக்கி பொண்டிங் அபாரமாக ஆடி 156 ஓட்டங்களைச் சேர்த்து, அணியைத் தோல்வியிலிருந்து காப்பாற்றினார். கடைசி வீரர்கள் பிரெட் லீ, கிளென் மக்ரா ஆகியோர் விக்கெட் விழாமல் தடுத்து நிறுத்தி, அணியைத் தோல்வியிலிருந்து காப்பாற்றினர்.

விக்கெட் இழப்பின்றி 25 ஓட்டங்கள் என்ற நிலையில் கடைசி நாள் ஆட்டத்தை திங்கட்கிழமை தொடங்கியது அவுஸ்ரேலியா. ஆனால், தொடக்கம் முதலே அது தனது விக்கெட்டுக்களை குறிப்பிட்ட இடைவெளியில் இழந்துவந்தது. லாங்கர் 14, ஹைடன் 36, மார்ட்டின் 19, கடிச் 12, கில்கிறிஸ்ட் 4 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தனர்.

தேநீர் இடைவேளையின்போது 5 விக்கெட்டுக்களை இழந்து 216




ஓட்டங்கள் மட்டுமே சேர்த்திருந்தது அவுஸ்ரேலியா. அதே நேரத்தில் பொண்டிங் ஒரு முனையில் நிதானமாக நின்று ஆடினார்.

கிட்டத்தட்ட இங்கிலாந்துக்கு வெற்றி நிச்சயம் என்ற நிலை உருவானது. தேநீர் இடைவேளைக்குப் பின்பு கிளார்க் 39 ஓட்டங்களுக்கும், ஜிலெஸ்பி ஓட்டமெதுவும் எடுக்காமலும் ஆட்டமிழந்தனர். 7 விக்கெட் இழப்புக்கு 264 ஓட்டங்கள் என்ற நிலையில் அவுஸ்ரேலியா இருந்தது. இங்கிலாந்து வெற்றியைப் பெறும் என்று எதிர்பார்ப்பு அதிகரித்தது.

இந்தநிலையில் முதல் இனிங்ஸில் 90 ஓட்டங்களைச் சேர்த்த சுழற்பந்து வீச்சாளர் ஷேன் வோன் நிதானமாக விளையாடி 34 ஓட்டங்களைச் சேர்த்து ஆட்டமிழந்தார். 8ஆவது விக்கெட்டுக்கு வோனும், பொண்டிங்கும் இணைந்து 76 ஓட்டங்களைச் சேர்த்தனர்.

இதனிடையில் நிதானமாக விளையாடிய பொண்டிங், அடிக்கவேண்டிய பந்துகளை அடித்தும், விக்கெட் வீழ்வதைத் தடுத்தும் பொறுப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். 276 பந்துகளைச் சந்தித்த அவர், ஒரு சிக்ஸர், 16 பவுண்டரிகளுடன் 156 ஓட்டங்களைச் சேர்த்திருந்த நிலையில் ஆட்டமிழந்தார்.

பொண்டிங் ஆட்டமிழந்தபோது - அவுஸ்ரேலியாவின் ஸ்கோர் 9 விக்கெட் இழப்புக்கு 354 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. எனினும், வெற்றி நிச்சயமில்லை என்ற நிலையில் தோல்வியைத் தவிர்க்க அவுஸ்ரேலியா பாடுபட்டது.



அதற்கேற்ப கடைசியாக ஜோடி சேர்ந்த லீ, மக்ரா ஆகியோர் விக்கெட்டை இழந்துவிடக்கூடாது என்பதில் கவனமாக இருந்தனர். இருவரும் இணைந்து 4 ஓவர்களைச் சந்தித்தனர். அதில் 15 ஓட்டங்களையும் சேர்த்தனர்.

இங்கிலாந்து பந்துவீச்சாளர்கள் தங்களுடைய முழுத் திறமையையும் வெளிப்படுத்தினர். இருப்பினும் உரிய நேரத்தில் கடைசி விக்கெட்டை வீழ்த்தமுடியாததால் வெற்றியை இழந்தனர்.

பிளின்ரொப் 4, ஹர்மிசன், ஹொகாட் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

இங்கிலாந்து தனது முதல் இனிங்ஸில் 444 ஓட்டங்களைச் சேர்த்தது. அவுஸ்ரேலியா தனது முதல் இனிங்ஸில் 302 ஓட்டங்களைச் சேர்த்தது.



இங்கிலாந்து இரண்டாவது இனிங்ஸில் 6 விக்கெட் இழப்புக்கு 280 ஓட்டங்களைச் சேர்த்து ஆட்டத்தை இடைநிறுத்தியது.

5 போட்டிகள் கொண்ட இந்தத் தொடரில் இரு அணிகளும் தலா ஒன்றில் வெற்றி பெற்றுள்ளன. அடுத்த டெஸ்ட் நட்டிங்ஹாமில் எதிர்வரும் 25ஆம் திகதி தொடங்கவுள்ளது.

## மெய்ன்ஸ் செஸ்; ஆனந்த் வெற்றி!

மெய்ன்ஸ்—



மெய்ன்ஸில் நடைபெற்ற மெய்ன்ஸ் கிளாஸிக் செஸ் போட்டியில் இந்தியாவின் விஸ்வநாதன் ஆனந்த் 8ஆவது தடவையாக பட்டம் வென்று சாதனை படைத்தார்.

இந்தப் போட்டியில் தொடர்ந்து 5ஆவது முறையாக சம்பியன் பட்டம் வென்ற பெருமையும் ஆனந்துக்கு உண்டு.

8 சுற்றுக்களைக் கொண்ட இந்தப் போட்டியில், ஆறாவது சுற்றில் ஆனந்த் தோற்றாலும் 4 புள்ளிகளுடன் முன்னிலையில் இருந்தார். அவரை எதிர்த்து ஆடிவரும் ரஷ்ய கிராண்ட் மாஸ்டர் அலெக்சாண்டர் கிரிஷ்சுக் 2 புள்ளிகளுடன் இருந்தார்.

மீதமுள்ள 2 சுற்றுகளில் அரைப் புள்ளியைப் பெற்றாலே சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றக்கூடிய நிலையில் இருந்தார் ஆனந்த்.

அதேபோல் 7ஆவது சுற்றில் ஆனந்தை எதிர்த்து ஆடிய கிரிஷ்சுக், ஆட்டத்தின் போக்கைத் தாக்குப் பிடிக்க முடியாமல் இறுதியில் தோல்வியை ஒப்புக்கொண்டார். இதையடுத்து ஆனந்த் பட்டம் வென்றார்.

## மொன்றியல் ரெனிஸில் நடால் சம்பியனானார்!



மொன்றியல்—

ரோஜர்ஸ் கிண்ண ரெனிஸ் போட்டியின் இறுதியாட்டத்தில் அகாஷியை வீழ்த்தி ராபல் நடால் சம்பியன் பட்டம் வென்றார்.

அமெரிக்காவிலுள்ள மொன்றியலில் ரோஜர்ஸ் கிண்ண ரெனிஸ் போட்டி நடைபெற்றது.

முன்னணி வீரர்கள் கலந்துகொண்ட இந்தப் போட்டியின் ஒற்றையர் பிரிவு இறுதியாட்டத்தில், பிரான்ஸ் ஓபன் சம்பியன் ராபல் நடால் (ஸ்பெயின்), 8 முறை கிராண்ட்ஸ்லாம் பட்டம் வென்ற அகாஷியை எதிர்கொண்டார்.

மழையால் பாதிப்புக்குள்ளான இந்த ஆட்டத்தில் 19 வயதான ராபல் நடால் முதல் செட்டைத் தனதாக்கினார். அடுத்த செட்டில் ஆக்ரோசமாக ஆடிய அகாஷி அந்த செட்டை தன் வசப்படுத்தினார்.

இதனால், கடைசி செட் ஆட்டம் மிகுந்த பரபரப்பாக இருந்தது. அந்த செட்டை ராபல் கைப்பற்றினார். முடிவில் ராபல் நடால் 6-3, 4-6, 6-2 என்ற செட் கணக்கில் அகாஷியை வீழ்த்தி சம்பியன் பட்டம் வென்றார்.

நடால் தொடர்ச்சியாக வென்ற 3ஆவது பட்டம் இதுவாகும். வெற்றி பெற்ற நடால் கூறுகையில் -

அகாஷி மிகச் சிறந்த வீரர் அவரை வென்றது மிகுந்த மகிழ்ச்சியளிக்கிறதெனத் தெரிவித்தார்.



இதேவேளை, அமெரிக்காவிலுள்ள லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் மகளிருக்கான லொஸ் ஏஞ்சல்ஸ் ஓபன் ரெனிஸ் போட்டி நடைபெற்று வந்தது. நேற்றுமுன்தினம் இறுதிப் போட்டி நடந்தது. அதில் பெல்ஜியம் வீராங்கனை கிம் கிளைஸ்டர்ஸும், சுலோவாகிய வீராங்கனை ஹட்ஸ்னோவாவும் மோதினார்கள். கிம் கிளைஸ்டர்ஸ் 6-4, 6-1 என்ற செட் கணக்கில் வெற்றிபெற்று சம்பியன் கிண்ணத்தைத் தட்டிச் சென்றார்.

## ஸ்கந்தா ஸ்ரார் கிரிக்கெட் போட்டி; கே.சி.சி.சி அணி வெற்றி பெற்றது!

சுன்னாகம்—

சுன்னாகம் கந்தரோடை ஸ்கந்தா ஸ்ரார் விளையாட்டுக்கழகம் நடத்தும் 30 ஓவர்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் முதல் சுற்று ஆட்டம் ஒன்றில் கே.சி.சி.சி விளையாட்டுக்கழக அணி, சென்றலைட்ஸ் அணியை வெற்றி கொண்டு இரண்டாம் சுற்றுக்குத் தகுதிபெற்றது.

மானிப்பாய் இந்துக்கல்லூரி மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை நடைபெற்ற இப்போட்டியில் - முதலில் துடுப்பெடுத்தாடிய கே.சி.சி.சி. விளையாட்டுக் கழகம் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 223 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

இதில் சங்கர் 34, பிரதீபன் மற்றும் ஐங்கரன் 32, பிரகாஷ் 28, சசிகரன் 22, மதூசன் 14, கிருபாலன் 13, ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தனர்.


பந்து வீச்சில் சென்றலைட்ஸ் அணியின் சார்பில் கமல் 4, பிரணவன் 2, விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். பதிலுக்குத துடுப்பெடுத்தாடிய சென்றலைட்ஸ் அணி 23.2 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 137 ஓட்டங்களை மட்டுமே பெற்றமையால் கே.சி.சி.சி விளையாட்டுக்கழகம் 86 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

சென்றலைட்ஸ் அணித்தலைவர் சசிகரன் 53, கமல் 14, றஜிகரன் 13 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் கே.சி.சி.சி சார்பில் பிரகாஷ்3, சிட்சபேசன் 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

இப்போட்டியின் சிறந்த வீரராக கே.சி.சி.சி அணியைச் சேர்ந்த பிரகாஷ் தெரிவுசெய்யப்பட்டார். (58)

## நியூஸிலாந்துடனான 2ஆவது டெஸ்ட்
## சிம்பாப்வே அணி 231 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது!



புலவாயோ—


நியூஸிலாந்துக்கு எதிரான 2ஆவது டெஸ்ட் போட்டியின் முதல் இனிங்ஸில் சிம்பாப்வே அணி 231 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

நியூஸிலாந்து - சிம்பாப்வே அணிகளிடையேயான 2 டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகள் கொண்ட தொடரின் முதல் போட்டியில் நியூஸிலாந்து அணி இனிங்ஸ் மற்றும் 294 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றிபெற்றது. இந்தநிலையில் இவ்விரு அணிகளிடையேயான 2ஆவது டெஸ்ட் போட்டி புலவாயோவில் நேற்றுமுன்தினம் தொடங்கியது.

நாணயச் சுழற்சியில் வென்ற சிம்பாப்வே அணி முதல் இனிங்ஸில் துடுப்பெடுத்தாடியது. தொடக்க வீரரான இப்ராகிம் ஓட்டமெதையும் எடுக்காமல் ஆட்டமிழந்தார். அவரைத் தொடர்ந்துவந்த கார்ஸ்லே (1), மசகட்சா (0), ரெய்லர் (37) ஆகியோர் நியூஸிலாந்து அணியினரின் பந்துவீச்சுக்குத் தாக்குப்பிடிக்கமுடியாமல் அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர்.

எனினும், 6ஆவது வீரராகக் களம் புகுந்த கப்டன் தைபு நிலைத்து நின்று ஆடி 76 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். 157 பந்துகளைச் சந்தித்த அவர் 11 பவுண்டரிகள், ஒரு சிக்ஸருடன் இந்த ஓட்டங்களை எடுத்தார். இதனால், சிம்பாப்வே அணி ஓரளவு நல்ல ஸ்கோரை எட்டியது. சிம்பாப்வே அணி 79 ஓவர்களில் 231 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தது. மஹவீர் 42, விசாட் 30 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர்.

நியூஸிலாந்து தரப்பில் ஷேன்



பொண்ட் அபாரமாகப் பந்துவீசி 6 விக்கெட்டுக்களை வீழ்த்தினார். விற்றோரி 2 விக்கெட்டுக்களையும், பிராங்ளின், மார்ட்டின் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

பின்னர் நியூஸிலாந்து அணி முதல் இனிங்ஸில் ஆட்டத்தைத் தொடங்கியது.

## விளையாட்டு




பின்லாந்தின் ஹெல்சிங்கியில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற உலக தடகள சம்பியன் போட்டியின் 400 மீற்றர் தொடர் ஓட்டத்தில் பட்டம் வென்றதும், தேசியக் கொடியை விரித்துப் பிடித்து மகிழ்ச்சியை வெளிப்படுத்தும் ரஷ்ய வீராங்கனைகள் (இடமிருந்து) நதால்யா அந்தியுக், யுலியா பெசோன்கினா, ஸ்வெட்லானா போஸ்பிலோவா, ஒலிஸ்யா கிராஸ்நோமுவெட்ஸ்

அன்பற்றவை எனப் பாகுபடுத்தி அட்டவணையை நிரப்புக.
வாருங்கள், குரங்கள், அம்மா, என்னடி, போடா, சொல்லுங்கோ, சென்றுவிடுங்கள், எழுந்திருங்கள், தடியன், செவிடா.

| அன்பானவை | அன்பற்றவை |
|---|---|
| | |
| | |
| | |
| | |

☆ பின்வரும் வினாக்களுக்கு சரியான விடையைத் தெரிவு செய்து அதன்கீழ்க் கோடிடுக.

19) இலங்கை சுதந்திரமடைந்து ஐம்பதாண்டுகள் நிறைவுவிழாவை 1998 ஆம் ஆண்டு கொண்டாடியது. அதனைக் குறிப்பிடப் பொருத்தமான சொல்.
...............................................

20) திருமணம் புரிந்தும் பிள்ளையில்லாதிருக்கும் பெண்ணைக் குறிப்பிடப் பொருத்தமான சொல்.
...............................................

21) ஆபத்து வருவதற்கு முன்பே அவற்றிலிருந்து தப்புவதற்கான வழிவகைகளைச் செய்துவிடவேண்டும் என்பதற்குப் பொருத்தமான பழமொழி.
...............................................

22) கீழே தரப்பட்டுள்ள சொற்களின் தொகுதி ஒவ்வொன்றுக்கும் பயன்படுத்தக்கூடிய ஒரு தனிச்சொல்லை எழுதுக.

1. கடற்படை, தரைப்படை, ஆகாயப்படை (...................)
2. மெய், வாய், கண், மூக்கு, செவி (...................)
3. நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் (...................)

23) பின்வரும் சொற்கள் ஒவ்வொன்றும் தொடர்பில், சரியாக எழுத்துக்கூட்டப்பட்ட ஆங்கிலச்சொல்லின் கீழ்க் கோடிடுக.

1. தமிழ் THAMIL, TAMIL, TMAIL
2. மாணவன் STUDANT, STUEDNT, STUDENT
3. கரும்பலகை BLACK BOARD, BLACK BOaD, BLACK BOARD

☆ சரியான விடையின் இலக்கத்தின் கீழ்க் கீறிடுக.

24) கால அட்டவணைக்கு அமைய கருமங்கள் செய்வதனால் உண்டாகும் நன்மை.


1. வேலைகளை அவசரமாகச் செய்துமுடித்தல்.
2. மனிதன் இயந்திரமாகுதல்.
3. ஓய்வுநேரம் மிதமாக உடல் ஆரோக்கியம் பெறுதல்.
4. மனித சுதந்திரம், மனித உரிமைகள் பறிபோதல்.

☆ பின்வரும் வினாக்களிலான சொற்களை அவற்றின் சரியான ஒழுங்கில் ஒழுங்குபடுத்தி இரு வாக்கியங்களை எழுதுக.

25) வீடு/நிலம்/இருத்தல்/கட்டும்/கூடாது/பள்ளமாக
...............................................

26) கையளவு/கல்லாதது/கற்றது/உலகளவு
...............................................

27) ஆக்கவேலைப்படத்தில் ஒரு வடிவத்தை ஆக்குவதற்குரிய கடதாசியைப் பயன்படுத்தி முதல் ஒன்பது ஒழுங்குகள் கீழே வரிப்படமூலம் விளக்கப்படுகின்றது. ஆக்கவேலையின் இறுதியில் பெறப்படும் அப்பொருளை எப்பெயர் கொண்டு அழைக்கலாம்?




☆ ஒரு புத்தகக்கடை உரிமையாளருக்கு யாழ்ப்பாணம், கொழும்பு ஆகிய இரு நகரங்களிலும் புத்தகக்கடைகள் இருந்தன. அந்தப் புத்தகக் கடைகளில் ஆண்டு 5 புலமைப்பரிசில் பயிற்சிப் புத்தகங்கள் 6 மாதங்களில் விற்கப்பட்ட எண்ணிக்கையைக் கீழேயுள்ள அட்டவணை காட்டுகிறது.

| மாதங்கள் | யாழ்ப்பாணம் | கொழும்பு |
|---|---|---|
| தை | 12 | 16 |
| மாசி | 8 | 10 |
| பங்குனி | 10 | 4 |
| சித்திரை | 16 | 16 |
| வைகாசி | 14 | 12 |
| ஆனி | 14 | 14 |


28) எந்த மாதம் இரு கடைகளிலும் மிகக் கூடுதலான புத்தகங்கள் விற்கப்பட்டன?

29) பங்குனி மாதம் வரையிலும் கொழும்புக் கடையில் விற்கப்பட்ட புத்தகங்களின் மொத்த எண்ணிக்கை யாது?

30) தைமாதம் இரு கடைகளிலும் முறையே நூறு புத்தகங்கள் வீதம் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்தது. ஆகவே ஆடி மாதம் தொடக்கத்தில் இரு புத்தகக்கடைகளிலும் எஞ்சியிருந்த புத்தகங்களின் எண்ணிக்கை யாது?

31) யாழ்ப்பாணம் புத்தகக்கடையில் குறைவான எண்ணிக்கையில் புத்தகம் விற்கப்பட்ட மாதம் எது?

32) ஆறு மாதகால இடைவெளியில் இரு கடைகளிலும் ஒவ்வொரு மாதமும் விற்கப்பட்ட புத்தகங்களின் எண்ணிக்கையைக் காட்டும் சலாகைக்கோட்டுப்படம் வரைக.



33) எந்த இரு மாதங்களிலும், இரு கடைகளிலும் சமமான எண்ணிக்கை புத்தகங்கள் விற்கப்பட்டன?

☆ இலங்கையில் தொலைக்காட்சி சேவைகளினால் மாணவர்கள் பெறும் நன்மைகள் நான்கு எழுதுக.

34) ...............................................
35) ...............................................
36) ...............................................
37) ...............................................

☆ இலங்கையில் தொலைக்காட்சி சேவைகளினால் மாணவர்கள் அடையும் தீமைகள் மூன்று எழுதுக.

38) ...............................................
39) ...............................................
40) ...............................................






# வினாத்தாள் 01

## மாணவர்களை பாடசாலைக்கு தேர்ந்தெடுப்பதற்கும், உதவிப்பணம் வழங்குவதற்குமாக தரம் 5 மாணவர்களுக்கு நடத்தப்படும் மாதிரிப் பரீட்சை வினாத்தாள் - 2005

**எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.**

☆ கீழுள்ள வாக்கியங்களில் இரு வாக்கியங்கள் ஒரே கருத்தை வெளிப்படுத்துவனவாக உள்ளன. அதனைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தை மட்டும் புள்ளிக்கோடுகளில் எழுதுக.

01) i) இராமரும், இலக்குமணனும், சீதையும் காட்டில் வசித்தார்கள்.
ii) மூன்று அரசர்கள் காட்டில் வசித்தார்கள்.
iii) இராமர் மனைவியுடனும், தம்பியுடனும் காட்டில் வசித்தார்.
iv) இராமரும், இலக்குமணனும், சீதையும் இராவணன் வாழ்ந்த காட்டில் வசித்தார்கள். (..............)

02) i) நானும், அம்மாவும், அம்மாவின் அப்பாவும் கோயிலுக்குப் போனோம்.
ii) நான் அம்மா, அப்பாவுடன் கோயிலுக்குப் போனேன்.
iii) அப்பா என்னையும், அம்மாவையும் கூட்டிக் கொண்டு கோயிலுக்குச் சென்றார்.
iv) அம்மாவின் தந்தையையும், என்னையும் கூட்டிக்கொண்டு அம்மா கோயிலுக்குப் போனாள். (..............)

03) i) குதிரையும், கழுதையும் ஓரளவு உருவ ஒற்றுமை உள்ள மிருகங்கள் ஆகும்.
ii) குதிரை வாங்கச் சென்ற குமரன் கழுதை வாங்கி வந்தான்.
iii) குதிரையின் விலையைவிட, கழுதையின் விலை குறைவானது.
iv) குதிரை என்று நினைத்து கழுதையை வாங்கி விட்டான் குமரன். (..............)

04) சரியான விடையைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.

நான் எனது நண்பன் ஒருவனை ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும் சந்திப்பது வழக்கம். மாதத்தின் முதல் ஞாயிறு பி.ப.12.30 மணிக்குச் சந்தித்தேன். இரண்டாவது ஞாயிறு பி.ப 1.20 இற்குச் சந்தித்தேன். மூன்றாவது ஞாயிறு பி.ப.2.10 இற்குச் சந்தித்தேன். ஆகவே நான்காவது ஞாயிறு அவனை எவ்வேளை சந்திப்பேன்? (..............)

05) கீழேயுள்ள மூன்று வினாக்களிலும் முதல் நிரலில் மூன்று ஆங்கிலச சொற்கள் காட்டப்படுகின்றன. அந்த ஒவ்வொரு சொல்லையும் குறிக்கும் இரகசிய இலக்கங்கள் இரண்டாவதாக நிரலில் காட்டப்படுகின்றது. ஒரு சொல் ஒரு இரகசிய இலக்கங்கள் மூலம் காட்டப்படினும், இரகசிய இலக்கம் ஒழுங்கிலே காட்டப் படவில்லை. ஆகவே ஆங்கிலச் சொற்கள் குறிக்கும் சரியான இரகசிய இலக்கங்களைத் தெரிவு செய்து, புள்ளிக் கோட்டில் எழுதவும்.

i)

| சொற்கள் | ஒழுங்கற்ற இரகசிய இலக்கங்கள் | ஒழுங்கான இரகசிய இலக்கங்கள் |
|---|---|---|
| ARE | 851 | .......................... |
| OAR | 253 | .......................... |
| SAW | 539 | .......................... |


ii)

| சொற்கள் | ஒழுங்கற்ற இரகசிய இலக்கங்கள் | ஒழுங்கான இரகசிய இலக்கங்கள் |
|---|---|---|
| RIM<br>TAN<br>HIT | 183<br>984<br>356 | |

iii)

| சொற்கள் | ஒழுங்கற்ற இரகசிய இலக்கங்கள் | ஒழுங்கான இரகசிய இலக்கங்கள் |
|---|---|---|
| LONG<br>CLUB<br>RAIL | 4398<br>6213<br>3570 | |

06) கீழே நான்கு சதுரங்களாக ஆக்கப்பட்டுள்ள தீக்குச்சி கோலத்திலிருந்து ஏதாகினும் மூன்று தீக்குச்சிகளை மட்டும் நீக்கி அவற்றின் இரண்டு தீக்குச்சிகளை மட்டும் மீளப்பயன்படுத்தி நான்கு சதுரக் கூடுகள் ஆக்கிய கோலத்தை வெற்றுக் கூட்டிற்குள் கீறிக் காட்டுக.



☆ சரியான விடையின் கீழ்க் கீறிடுக.

07) பூமி தன்னைத்தானே சுற்றுவதற்கு எடுக்கும் காலம்.

i) 365 1/4 நாட்கள் ii) 366 நாட்கள் iii) 24 மணித்தியாலங்கள்

08) பூமி சூரியனைச் சுற்றுவதற்கு எடுக்கும் காலம்.

i) 365 1/4 நாட்கள் ii) 366 நாட்கள் iii) 24 மணித்தியாலங்கள்.


09) பூமி தன்னைத்தானே சுற்றுவதனால் ஏற்படுவது.

i) இரவு/பகல் ii) அமாவாசை/பௌர்ணமி iii) பருவகாலங்கள்

10) பூமி சூரியனைச் சுற்றுவதனால் ஏற்படுவது

i)இரவு/பகல் ii) அமாவாசை/பௌர்ணமி iii) பருவகாலங்கள்

☆ இது ஒருநகர வீதியையும், அந்த வீதியில் அமைந்துள்ள சேவை நிலையங்களையும் குறித்துக் காட்டுகின்றது. இதனை நன்கு அவதானித்து, அதன் கீழ் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை அளிக்கவும்.




11) படத்தில் கோயில் அமைந்துள்ள வீதியில், அமைந்துள்ள வேறு ஒரு நிறுவனத்தின் பெயர் என்ன? ....................

12) கீழே பஸ் நிலையத்திலிருந்து ஒருவர் வேறு ஓர் இடத்திற்குச் செல்வதற்கு இன்னொருவர் வழி கூறுகின்றார். அதன்படி அவர் சென்றடையும் நிறுவனத்தின்பெயர் யாது?

☆ வடக்கு நோக்கி சென்று வரும் சந்தியில், இடது கைப்பக்கம் திரும்பி, மேற்கு நோக்கி சென்று இரண்டாவது சந்தியில் வலதுகைப்பக்கம் திரும்பி, மேற்கு நோக்கி சென்று முதலாவது சந்தியில் இடது கைப்பக்கம் திரும்பி, மீண்டும் மேற்கு நோக்கிச் சென்று முதல் சந்தியில் இடதுகைப்பக்கம் திரும்பி, வடக்கு நோக்கிச் சென்றடையலாம்.

பாடசாலையிலிருந்து வைத்தியசாலைக்கான தூரம் பஸ் நிலையத்துக்கான தூரம் அதிகமானதா? ..................

13. பஸ்நிலையத்துக்கு எத்திசையில் கோயில் அமைந்துள்ளது? ..................

☆ பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிலும் ஐந்து நிகழ்ச்சிகள் தரப்பட்டுள்ளன. அவை சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான ஒழுங்கு வரிசையில் நிரப்பப்படவில்லை. அந்த நிகழ்ச்சியை எந்த ஒழுங்கிலே தரப்படவேண்டும் எனக் கண்டு அந்த ஒழுங்கினை 1 தொடக்கம் 5 வரையுள்ள இலக்கங்கள் மூலம் அடைப்புக்குறிக்குள் காட்டுக.

14) மரத்தின் மேற்பரப்பிலிருந்து நீர் ஆவியாகி, ஆகாயத்தைச் சென்றடைந்தன. ..................
மழைநீர் நிலத்தின் பள்ளப்பிரதேசத்தில் உள்ள நீர்நிலைகளைச் சென்றடைந்தன. ..................

15) நிலத்தின் அடியிலுள்ள நீர் வேரினூடாக உறிஞ்சப்பட்டு இலைகளைச் சென்றடைந்தன. ..................

16) ஆகாயத்தில் நீராவியாகவிருந்த நீர் குளிர்ச்சியடைந்து, நீராகி நிலத்தை வந்தடைந்தது. ..................
கடல், குளம், ஆறு போன்ற நீர் நிலைகளிலிருந்து நீர் மீண்டும் நீராவியாகி ஆகாயத்தை நோக்கிச் சென்றன. ..................

17. விண்ணப்ப படிவத்தை வங்கி முகாமையாளரின் உதவியுடன் பூர்த்தி செய்தார். ..................
குமாரசிவம் இலங்கை வங்கியை நோக்கிச் சென்றார். ..................
கணக்குப் புத்தகத்தையும், பற்றுச் சீட்டையும் பெற்றுக் கொண்டு வீடு திரும்பினார். ..................
வங்கியில் புதிய கணக்கை ஆரம்பிப்பதற்கான விண்ணப்ப படிவத்தை வாங்கினார். ..................
பணத்தை வைப்பிலிட்டார். ..................


☆ பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிலும் காரியத்திற்குரிய சரியான காரணத்தின் கீழ்க் கீறிடுக.

18) பாலா பந்தினுள் அதிகளவு காற்றைச் செலுத்தினான். பந்து படார் என்று வெடித்தது.

18. இந்திரன் தனது பிறந்த நாளன்று அழகான ஆடைகள் அணிந்திருந்தான்.

20. பஸ்ஸினுள் ஏறிய சிறுவன், மிதிபலகையில் கிடந்த வாழைப்பழதோல் சறுக்கி கீழே விழுந்தான்.

☆ ஒவ்வொரு பட வரிசையிலும் வெற்றுக் கூட்டிற்குப் பொருத்தமான படத்தைத் தெரிவு செய்து அதற்குரிய எண்ணைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக?



21) (..........)

22) (..........)

23) (..........)

☆ கீழே தரப்பட்டுள்ள சொற்கூட்டங்கள் ஒவ்வொன்றும் உணர்த்துகின்ற கருத்தைத் தரும் தனிச்சொல்லை, அடைப்புக்குள் தரப்பட்டுள்ள மூன்று சொற்களிலிருந்தும் தெரிவுசெய்து அதன் கீழ் கோடுக.

24) கடல், குளம், ஏரி, ஆறு என்பன.
(மழைநீர், நீர்நிலைகள், நீரோடைகள்)

25) 366 நாட்களைக் கொண்ட வருடம்
(ஒரு வருடம், சாதாரண வருடம், லீப் வருடம்)

26) கதிரை, மேசை, கட்டில், தொட்டில், விற்கும் இடம்.
(தளபாடக்கடை, பாடசாலை, வைத்தியசாலை)

☆ கீழே தரப்படும் பொருட்களை அளக்கும் அளவிடைகளைத் தெரிவு செய்து, அதன் கீழ்க் கீறிடுக.

27) மண்ணெண்ணெய் (மீற்றர், லீற்றர், கிராம்)

28) துணி (மீற்றர், லீற்றர், கிராம்)

29) சீனி (லீற்றர், மீற்றர், கிராம்)

30) கீழே தரப்பட்டுள்ள இந்து அராபிய இலக்கங்களைக் குறிக்கும் உரோம இலக்கங்களைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கீறிடுக.
i) 18 (XVIII, IIXX, XIIX)
ii) 33 (XXXIIV, XXXIII, XIXIXI)
iii) 38 (XXVIIIX, VIIIXXX, XXXVIII)
iv) 29 (XXVIII, XXIX, XXXI)

31) பின்வரும் ஒவ்வொரு வாக்கியங்களிலும் இரு பிழையான எழுத்துகளைச் சுற்றி வட்டமிடுக.
i) சிறுமி தனனை சீவுகின்ரால்.
ii) பகைவர்கள் கோட்டையினுழ் நுலைந்தார்கள்.
iii) கடற்கரையில் அளை வீசுகின்ரது.
iv) பூக்களின் மனம் புத்துனர்ச்சியைத் தரும்.

32) வீட்டுப் பாவனைப் பொருட்கள் பெறுமதி கூடியதிலிருந்து, பெறுமதி குறைந்தது என்ற ஒழுங்கு முறையில் அமைந்த விடையின் கீழ்க் கீறிடுக.
i) வானொலிப் பெட்டி, இஸ்திரிப்பெட்டி, பனையோலைப் பெட்டி, தொலைக்காட்சிப்பெட்டி
ii) பனையோலைப்பெட்டி, இஸ்திரிப்பெட்டி, வானொலிப்பெட்டி, தொலைக்காட்சிப்பெட்டி
iii) தொலைக்காட்சிப்பெட்டி, வானொலிப்பெட்டி, இஸ்திரிப்பெட்டி, பனையோலைப்பெட்டி
iv) இஸ்திரிப்பெட்டி, வானொலிப்பெட்டி, பனையோலைப்பெட்டி, தொலைக்காட்சிப்பெட்டி


☆ சரியான விடையைப் புள்ளிக் கோட்டில் எழுதவும்.

33) என்னிடம் உள்ள பணத்தைவிட என் தங்கையிடம் மூன்று மடங்கு பணம் உள்ளது. என்னுடைய பணத்தையும், தங்கையின் பணத்தையும் ஒன்று சேர்த்த பொழுது ரூபா 160 ஆயின் ஆரம்பத்தில் என்னிடம் இருந்த பணத்தொகை எவ்வளவு?

34) தொழிற்சாலையொன்றில் தொழில் புரியும் தொழிலாளி ஒருவரின் நாளாந்தச்சம்பளம் ரூபா 40 ஆயின், அவர் ரூபா 200ஐ உழைப்பதற்கு எத்தனை நாட்கள் தொழில் புரிய வேண்டும்.

35) முற்பகல் 8 மணிக்கு பயணம் புறப்பட்ட ஒருவர், அன்றைய தினம பிற்பகல் 6 மணிக்கு பயணத்தை முடித்துக் கொண்டாராயின் அவர் பயணத்தில் செலவிட்ட மொத்தக் காலம் எவ்வளவு?

☆ பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிலும் முதலாவதாகத் தரப்பட்டுள்ள வடிவத்திற்கு ஏதோவொரு வகையில் சமனாக அமையாத வடிவத்தை எதிரே தரப்பட்டுள்ள நான்கு வடிவங்களிலிருந்து தெரிவு செய்து, அதன் இலக்கத்தின் கீழ்க்கோடிடுக.



36) 1 2 3 4

37) 1 2 3 4

38) 1 2 3 4

39) 1 2 3 4

40) 1 2 3 4

T.அம்பிகைபாகன் B.Ed Tamil Sp.Trd
ஆசிரிய ஆலோசகர் மேல்மாகாணம்



# வினாத்தாள் 2

எல்லா வினாக்களுக்கும் விடை தருக

வெள்ளைக் கொக்கு ஒன்று வந்தது
மீனைக் கொத்திப் பார்த்தது
துள்ளி துள்ளி மீனும் ஓடித்
தூரப் பாய்ந்து போனது
எல்லையற்ற கோபத்தோடு
இன்னும் கொக்கு முயன்றது
கல்லில் துள்ளி விழுந்த மீனைக்
கௌவிக் கொண்டு பறந்தது.

01) இப்படியிருந்தும் மீன் கொக்கிடம் அகப்பட்டதா? அல்லது தப்பி விட்டதா?
..................

02) கொக்குக்கு எல்லையற்ற கோபம் வரக் காரணம் யாது?
..................

03) மீனுக்கு நீந்தும் ஆற்றல் உள்ளதுபோல் கொக்கிடம் உள்ள ஆற்றல் எது?
..................

04) கொக்கின் நிறத்துக்கு எதிரான நிறத்தையுடைய பறவையொன்றின் பெயர் எழுதுக?
..................

05) பின்வரும் சொற்கள் ஒவ்வொன்றுக்குமாக ஆங்கிலச் சொல்லைத் தருக?
1. வெள்ளை .................. 2. மீன் ..................
3. ஓடு .................. 4. கோபம் ..................

06) பின்வரும் சொற்கள் ஒவ்வொன்றுக்குமான பன்மைச் சொல்லைத் தருக?
1. போனது .................. 2. மீனை ..................
3. ஒன்று .................. 4. வெள்ளை ..................

இலங்கை 2.50

சேருதல் :-
க.மயில்வாகனம்,
48 குமரகுருபரன் வீதி,
மட்டக்களப்பு.

அனுப்புதல் :-
சி.குகநாதன்,
இல. 27/4, திருவள்ளுவர் வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

30000

☆ மேலுள்ள கடித உறையை அவதானித்து கீழுள்ள வினாக்களுக்கு எதிரேயுள்ள பொருத்தமான விடையைத் தெரிவு செய்து அவற்றைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.

07) இக்கடிதம் சென்றடைவது (சி.குகநாதனிடம், க.மயில்வாகனத்திடம், க.குமரகுருபரனிடம்)
..................


08) மட்டக்களப்பு தபால் அலுவலகத்துக்குரிய தபால் குறியீட்டு இலக்கம் (27/4, 48, 30000)
..................

09) இக்கடிதத்தை எழுதியவரின் வதிவிடம் (யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, கொழும்பு)
..................

10) இலங்கையில் சாதாரண தபாலில் ஒட்டப்படவேண்டிய முத்திரையின் பெறுமானம் (ரூபா 1.00, ரூபா 2.00, ரூபா 2.50)
..................

11) இலங்கையில் தொலைத்தொடர்பு சாதனங்களில் மிகக் குறைந்த கட்டணத்தில் தகவல்கள் பரிமாற உகந்த சாதனம் (தொலைபேசி, கடிதம், தொலைக்காட்சி)
..................

☆ பெரும்பாலான குழாய்க்கிணறுகளிலிருந்து நீரை மேலே கொண்டு வரப் பயன்படுத்தப்படும் நீர்ப்பம்பியொன்றின் அமைப்புப் படமொன்று கீழே காட்டப்படுகின்றது.




☆ மேலுள்ள நீர்ப்பம்பிப் படத்தை நன்கு அவதானித்து, சிந்தித்து கேட்கப்படும் கேள்விகளுக்குரிய விடையைப் புள்ளிக்கோட்டில் எழுதவும.

12) தள்ளியை மேல்நோக்கி இழுக்கும்போது, எந்த வாயில் மூடப்படும்? எந்த வாயில் திறபடும்?
..................

13) தள்ளியை கீழ்நோக்கித் தள்ளும்போது எந்த வாயில் மூடப்படும்? எந்தவாயில் திறபடும்?
..................

14) கீழுள்ள நீர் - நீர்ப்பம்பியினுள் இழுக்கப்படுவது தள்ளி மேல் இழுக்கப்படும் வேளையிலா? அல்லது தள்ளி கீழ் தள்ளப்படும் வேளையிலா?
..................

15) நீர்ப்பம்பியிலுள்ள நீர் குழாய்வழியாக வெளியேறுவது தள்ளி மேல் இழுக்கப்படும் வேளையிலா? அல்லது தள்ளி கீழ் இழுக்கப்படும் வேளையிலா?
..................

16) இந்த நீர்ப்பம்பியின் தள்ளியை ஐந்து தடவைகள் இழுத்துத் தள்ளுவதன்மூலம், 20 லீற்றர் தண்ணீரைப் பெறலாமாயின், 200 லீற்றர் கொள்கலன் ஒன்றைப் பூரணமாக நிரப்புவதற்கு எத்தனை தடவைகள் இழுத்துத் தள்ளவேண்டும்?
..................

எல்லா உயிரினங்களும் அன்பை விரும்புகின்றன. நாமும் எம்மீது எல்லோரும் அன்பாக இருக்கவேண்டும், அன்பாகப் பேசவேண்டும் என்று விரும்புகின்றோம். அதேபோல் எல்லோரும் நாம் அன்பாகப் பேசவேண்டும் என்று விரும்புகிறார்கள். ஆயினும் நாம் சிலவேளைகளில் கூடாத சொற்களைக் கையாண்டு அன்பற்றுப் பேசுகின்றோம்.

17) ஒருவகையான உணர்ச்சிகள் கூடும்போது அன்பற்ற வார்த்தைகள் பேசப்படுகின்றன. அவை எவ்வகையான உணர்ச்சிகள் என்பதைப் புள்ளிக்கோட்டில் எழுதவும்.

18) கீழுள்ள பேச்சுவழக்குச் சொற்களை அன்பானவை,

# கல்வி நடவடிக்கைகளை குழப்ப படைத்தரப்பினர் முயல்கின்றனர்!

## தமிழ் தேசிய விழிப்புணர்வுக் கழகம்

யாழ்ப்பாணம்—

யாழ்.குடாநாட்டு மாணவர் சமூகத்தை ஆயுதமுனையில் அச்சுறுத்தி, அவர்களின் கல்வியைச் சீர்குலைக்கும் நோக்குடனே சர்வதேச மாணவர் பேரவையை படையினர் தாக்க முயற்சித்ததாக - தமிழ்த் தேசிய விழிப்புணர்வுக் கழகம் குற்றஞ்சாட்டியுள்ளது.

நேற்றுமுன்தினம் அதிகாலை சர்வதேச மாணவர்பேரவை அலுவலகம் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரனின் அலுவலகம் ஆகியவற்றைச் சுற்றிவளைத்து தாக்குதல் நடத்த தயாரான சம்பவம் தொடர்பாக வெளியிட்ட கண்டன அறிக்கையிலேயே தமிழ்த் தேசிய விழிப்புணர்வுக் கழகம் இவ்வாறு தெரிவித்துள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

மாணவர்களின் கல்வி மேம்பாட்டுக்கும், தமிழ்மக்களின் சமூகப் பொருளாதார மேம்பாட்டுக்குமாக உழைத்துக் கொண்டிருக்கின்ற சர்வதேச தமிழ் மாணவர் பேரவை அலுவலகம், படையினரால் துப்பாக்கி முனையில் சுற்றிவளைக்கப்பட்டு, தாக்குதல் நடத்த முயற்சிசெய்யப்பட்டபோது அங்கு தங்கியிருந்து கல்வி கற்கும் பாடசாலை மற்றும் உயர் கல்வி நிறுவனங்களைச் சேர்ந்த மாணவர்களும், மாணவர் பேரவை உறுப்பினர்களும் விழித்துக் கொண்டமையால் இராணுவத்தினரின் முயற்சி முறியடிக்கப்பட்டுவிட்டது.

இது குடாநாட்டு மாணவர் சமூகத்தை இராணுவம் மிரட்ட எடுக்கும் ஒரு முயற்சியாகவே கருதுகிறோம். இந்த அலுவலகம் ஏற்கனவே இரு தடவைகள் தாக்குதலுக் குள்ளாகியுள்ளமை இங்கு சுட்டிக்காட்டப்பட வேண்டியுள்ளது.

இந்த அலுவலகத்தில் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரனின் அலுவலகமும் அமைந்துள்ளது. தமிழ் மக்களின் அடக்கு முறைகளுக்கெதிராகவும், மாணவர்களின் உரிமைக்காகவும் குரல் கொடுத்து வரும் இந்த மாணவர் பேரவையினருக்கு இராணுவம் தொடர்ந்து அச்சுறுத்தல்களையும், மிரட்டல்களையும் ஏற்படுத்தி வருகின்றமையை வன்மையாகக் கண்டிக்கிறோம். இவ்வாறான மிரட்டல்கள் உடன் நிறுத்தப்படவேண்டும் என சம்பந்தப்பட்டவர்களிடம் கோரிக்கைவிடுக்கிறோம் என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



19 வயதுக்குட்பட்ட பிரிவில் வலய மட்டத்தில் இரண்டாம் இடத்தையும், மாவட்ட மட்டத்தில் மூன்றாவது இடத்தையும் பெற்ற யாழ்.வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை கூடைப்பந்தாட்ட அணியைப் படத்தில் காணலாம்.

# ஐ.பி.எம்.எஸ்.நிறுவனத்தின் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

யாழ்ப்பாணம்—

ஐ.பி.எம்.எஸ். நிறுவனத்தின் 2004 /2005 கல்வியாண்டில் கணினிக் கற்கை நெறியைப் பூர்த்தி செய்தவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு, எதிர்வரும் 21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் நிறுவனத்தில் கடந்த கல்வியாண்டில் கணினிக் கற்கைநெறியைப் பூர்த்தி செய்துகொண்ட 500 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் சான்றிதழ்களைப் பெறவுள்ளனர்.

இந்த நிகழ்வை மேற்படி நிறுவனத்தின் இயக்குநர் ஜெயசோதி விக்னேஸ்வரன் தலைமை தாங்கி நடத்தவுள்ளார்.

இதில் பிரதம விருந்தினராக ஐ.ஐ.எஸ்.குறூப் இன் பிரதம நிறைவேற்று அதிகாரி கலந்து கொள்ளவுள்ளார்.

அத்துடன் கடந்த கல்வி யாண்டில் திறமைச்சித்திபெற்ற தேவகி சுப்பிரமணியம், பானுமதி பரமராஜா, இராமலிங்கம் தசாந்திரன், நல்லைவரதயன் கஜானந்த், மீரா மகேந்திரன் ஆகியோருக்கு சிறப்புப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

# முழுமதி தின அறிவியல் விழா

அரியாலை—

அரியாலையூர் விஸ்வகுல திலகர் நுண்கலைச் செல்வர் அமரர் வல்லிபுரம் தம்பிப் பிள்ளை ஞாபகார்த்த முழுமதி அறிவியல் விழா - அரியாலை ஸ்ரீ கலைமகள் சனசமூக நிலையத்தில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை மாலை 4 மணியளவில் நிலையத் தலைவர் இ.மதிகரன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க சிரேஷ்ட துணைப் பொதுச்செயலாளர் த. பஞ்சலிங்கம், சிறப்பு விருந்தினராக ஆசிரியர் சரா புவனேஸ்வரன், கௌரவ விருந்தினராக தொழில்நுட்ப உத்தியோகத்தர் க.கந்தசாமி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (55)

## வருடாந்த மஹோற்சவம்

கொக்குவில்—

நாகேஸ்வரம் - அளவெட்டி தெற்கு ஸ்ரீ நாகவரத நாராயனர் தேவஸ்தான வருடாந்த மஹோற்சவம் - நாளை முற்பகல் 11.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி, தொடர்ந்து 12 தினங்கள் நடைபெறவுள்ளது.

விசேட நிகழ்ச்சியாக தினமும் 5.30 மணி தொடக்கம் 6.30 மணிவரை ‘கந்தன் கருணை’ இசைக்கதை இடம்பெறும்.

26 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மதியம் 12.15 மணிக்கு புதிய சித்திரத்தேர் வெள்ளோட்டம் நடைபெறும். 27 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு இரதோற்சவமும், 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்குத் தீர்த்த உற்சவமும் நடைபெறும். (206)

★ ★ ★

புத்தூர்—

புதுவை ஆலடி முருகன் தேவஸ்தான வருடாந்த மஹோற்சவம் - நாளை நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 10 தினங்கள் விஷேட உற்சவம் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 26 ஆம் திகதி தேர்த் திருவிழாவும், 27 ஆம் திகதி தீர்த்த உற்சவமும், மறுநாள் மகேஸ்வர பூசையும், அன்னதானமும் நடைபெற்று -வள்ளி தெய்வானை சமேதராய் முருகப் பெருமான் வீதியுலா வரும் காட்சி நடைபெறவுள்ளதுடன், இறுதி நிகழ்வாக கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

## நிறைநிலா நாட் கருத்தரங்கு

யாழ்ப்பாணம்—

தமிழ் எழுத்தாளர் ஒன்றியத்தின் நிறைநிலா நாட் கருத்தரங்கு - நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு ஆரியகுளம் சந்தியில் உள்ள எழுத்தாளர் ஒன்றிய அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

செங்கை ஆழியானின் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிறைநிலா நாட் கருத்தரங்கில் - ‘பெண் படைப்பிலக்கியவாதிகளின் ஆளுமை’ என்னும் விடயம் தொடர்பாக சி.ரமேஸ் கருத்துரை வழங்கவுள்ளார்.

## வரலக்ஷ்மி காப்பு

கொக்குவில்—

யாழ்.வண்ணை ஸ்ரீ வெங்கடேச வரதராஜப் பெருமாள் கோவிலில் நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை காலை 6.30 மணிக்கு ஸ்ரீ வரலக்ஷ்மி உற்சவம் ஆரம்பமாகும்.

ஸ்ரீ மகாலக்ஷ்மி அம்பாளுக்கு நவகலச அபிஷேகமும் ஆராதனை அர்ச்சனை நடைபெற்று - முற்பகல் 10.30 மணிக்கு விசேட தீபாராதனை நிகழும். அதனைத் தொடர்ந்து அம்பாள் பத்மாசனத்தில் திருவீதி எழுந்தருள்வார். உற்சவம் நிறைவுற்றதும் அடியார்களுக்கு வரலக்ஷ்மி காப்பு வழங்கப்படுமென்று தெரிவிக்கப்படுகிறது. (206)

## யாழ்ப்பாணம் - கிளிநொச்சி மாவட்டங்களில்

# உட்கட்டமைப்பு அபிவிருத்திக்கு 12 கோடி 50 லட்சம் ரூபா ஒதுக்கீடு

யாழ்ப்பாணம்—

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் உட்கட்டமைப்பு வசதிகளை துரிதகதியில் அபிவிருத்தி செய்வதற்கு அரசாங்கம் 12 கோடி 50 லட்சம் ரூபாவை ஒதுக்கியுள்ளது. இதில் 12 கோடி ரூபாவை புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சு ஏற்கனவே வழங்கியுள்ளது.

யாழ்.மாவட்டதில் சுகாதார உட்கட்டமைப்பு அபிவிருத்தி வேலைகளுக்கு ஒரு கோடி 50 இலட்சம் ரூபாவும், உள்ளூராட்சிமன்ற அபிவிருத்தி வேலைகளுக்கு 1 கோடி 85 லட்ச ரூபாவும், மாவட்ட நிர்வாக நடவடிக்கைகளுக்கு 15.64 மில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

மேலும் கல்வி அபிவிருத்தி நடவடிக்கைகள் மற்றும் சமய, கலாசார நடவடிக்கைகளுக்கும் தலா ஒன்றரைக் கோடி ரூபாவும், விவசாய அபிவிருத்திப் பணிகளுக்கு 10 இலட்சம் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கிளிநொச்சி மாவட்டத்துக்கு ஒதுக்கப்பட்ட நிதி 530 புதிய தொலைபேசி இணைப்புகளை வழங்குவதற்கும் மின்விநியோகம், விவசாயம், சுகாதாரம் மற்றும் இரணைமடுக் குளத்தின் அபிவிருத்தி போன்ற உள்ளகக் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காகவும் செலவிடப்படவுள்ளது.


## இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

### அகவை ஒன்று



பெயர் : சி.துவாரகன்
முகவரி : ‘துவாரகை’ கரவெட்டி

### அகவை ஐந்து



பெயர் : இ.அபிராமி
முகவரி : கந்தரோடை, சுன்னாகம்





# சீனாவில் வர்த்தகக் கண்காட்சி!

யாழ்ப்பாணம்—

சீனாவில் கன்ரூன் நகரில் ஒக்ரோபர் 13 ஆம் திகதி தொடக்கம் 30 ஆம் திகதிவரை நடைபெறவுள்ளது.

இந்தக் கண்காட்சியில் இயந்திரங்கள், இயந்திர உற்பத்தி, இயந்திர உபகரணங்கள், உதிரிப்பாகங்கள், கட்டடப் பொருட்கள், இரசாயனப் பொருட்கள், வாகனங்கள் ,வாகன உதிரிப்பாகங்கள், விவசாய இயந்திரங்கள், விவசாய உபகரணங்கள், கைத்தொழில் இயந்திரங்கள், கட்டட இயந்திரங்கள், உபகரணங்கள், வீட்டுப் பாவனைப் பொருட்கள், செரமிக் பொருட்கள் மற்றும்-

தளபாடங்கள், பாடசாலை உபகரணங்கள், விளையாட்டுப் பொருட்கள், அன்பளிப்புப் பொருட்கள், மணிக்கூடுகள், ஆபரணங்கள், அழகுசாதனப் பொருட்கள், மின் உபகரணங்கள், ஆகியவற்றுடன் தொடர்புடையோர் பங்குபற்றுதல் நன்மையளிக்கும்.

## சிலை திறப்பு விழாவும், பெயர் வளைவு திறப்பு விழாவும்

அரியாலை—

யாழ். கனகரட்ணம் மத்திய மகா வித்தியாலயத்தின் நிறுவுநர் அமரர் கனகரத்தினத்தின் சிலை திறப்பு விழாவும், பெயர் வளைவு திறப்பு விழாவும் இன்று பிற்பகல் 2 மணியளவில் பாடசாலை அதிபர் வீ.மாணிக்கம் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் அறிமுக உரையை யாழ். பல்கலைக்கழக நிதியாளர் கே.கனகரட்ணமும், ஆசியுரையை நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரியாரும், யாழ்.நல்லூர் சென். பெனடிக்ற் றோ.க.த.க.பாடசாலை அதிபர் அருட்சகோதரி எம்.தேவநேசமும், வாழ்த்துரையை யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் வீ.ரீ.செல்வரத்தினம் மற்றும் முன்னாள் கமத்தொழில் திணைக்கள உதவிப் பணிப்பாளர் எஸ்.ரி.பத்மநாதன் ஆகியோரும் -

தலைமையுரையை பாடசாலை அதிபர் வீ.மாணிக்கமும், சிறப்புரையை யாழ்.பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸும், நன்றியுரையை பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர் சொ.மன்மதராஜலிங்கமும் நிகழ்த்தவுள்ளனர். (55)

## ஒருங்கிணைப்புகுழு கூட்டம்

சுதுமலை—

சண்டிலிப்பாய் பிரதேசத்தின் மாதாந்த ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நாளை வியாழக்கிழமை காலை 10 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் வ.ரூபினி தலைமையில் நடைபெறவிருக்கும் இந்தக் கூட்டத்துக்கு அரச, அரச சார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகளை பங்கேற்குமாறு அழைப்புவிடப்பட்டிருக்கிறது.

இந்தக் கலந்துரையாடலில் சென்றமாத கட்டட அபிவிருத்தி வளர்ச்சிகள் ஏனைய விடயங்கள் என்பனவும் விரிவாக ஆராயப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (44)

# அரியாலையில் திருடப்பட்ட மணலுடன் மனித எலும்புக்கூட்டின் எச்சங்கள்!

யாழ்ப்பாணம்—

அரியாலைப் பகுதியில்திருட்டு மண் அகழ்ந்தெடுக்கும் குழு ஒன்று, அந்தப் பகுதியில் அமைந்துள்ள சேமக்காலை ஒன்றில் மண் அகழ்ந்தெடுத்ததுடன் - புதைக்கப்பட்ட எலும்புக்கூடுகளையும் எடுத்துச்சென்றனர்.

இந்தச் சம்பவம் அரியாலைப் பகுதியில் சில தினங்களுக்கு முன்பு நடைபெற்றது.

அரியாலைப் பகுதியில் திருட்டு மண்அகழ்வு அண்மைக் காலமாக அதிகரித்துவருகிறது.

சில தினங்களுக்குமுன்பு ஒரு குழுவினர் இரவுவேளை அரியாலைப் பகுதிக்குள் நுளைந்து, அங்குள்ள கிறிஸ்தவ சேமக்காலை ஒன்றில் இடம்தெரியாது திருட்டுத்தனமாக மண் அகழ்ந்தெடுத்து, யாழ்.நகரப்பகுதியில் உள்ள வீடு ஒன்றில் இரவோடு இரவாகப் பறித்துவிட்டுத் தப்பிச்சென்றுள்ளனர். இந்த வீட்டு உரிமையாளர்கள் காலை எழுந்து மண் குவியலைப் பார்த்தபோது, அந்த மண் கும்பிக்குள் எலும்புக்கூட்டின் சில பகுதிகளும் - ஆடைகளும் காணப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# ஓமந்தை இராணுவச் சோதனைச்சாவடியூடாக
# போராளிகள் செல்வதற்கு படையினர் அனுமதி!

வவுனியா—

ஓமந்தை இராணுவச் சோதனைச் சாவடியூடாக விடுதலைப் புலிகள் வன்னிக்குச் செல்வதற்கும், அங்கிருந்து இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்கு சென்று வருவதற்கும் படையினர் அனுமதி வழங்கியுள்ளதாகப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் வவுனியா மாவட்ட தலைவர் ஜோன் சுனீனன் தெரிவித்தார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணிக்கு ஓமந்தை இராணுவச் சோதனைச் சாவடி ஊடாக கிளிநொச்சிக்குச் செல்ல முற்பட்ட வவுனியா மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் ஞானம், அவரது உதவியாளர்கள் ஆகியோரைப் படையினர் தடுத்து நிறுத்தியிருந்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக வவுனியா மாவட்ட அரசியற் துறைப் பொறுப்பாளர் ஞானம் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் வவுனியா மாவட்ட அலுவலகத்துக்கு முறைப்பாடு செய்திருந்தார்.

இந்த முறைப்பாடு தொடர்பாக கண்காணிப்புக் குழுவின் அலுவலகத்தில் அரசியற்துறைப் பொறுப்பாளர் ஞானத்துக்கும், கண்காணிப்புக் குழுவின் தலைவருக்குமிடையில் சந்திப்பொன்று நடைபெற்றது.

படையினர் தமது போக்குவரத்துக்கு இடையூறு விளைவித்த சம்பவம் தொடர்பாக, இந்தச் சந்திப்பின் போது விளக்கமளித்தார். அத்துடன் படையினரின் இந்த நடவடிக்கை போர் நிறுத்த மீறல் எனவும், போராளிகளின் பயணத்துக்குப் படையினர் விதித்துள்ள தடையை நீக்க வேண்டும் என்றும், இது தொடர்பாக சாதகமான பதில் வழங்கப்படாவிட்டால், பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும் என அவர் எச்சரிக்கை விடுத்திருந்தார்.

இதன் பின்னர் ஜோன் சுனீனன் அவசர அவசரமாகப் படை அதிகாரிகளைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியிருந்தார்.

இதன் போதே போராளிகள் ஓமந்தைச் சோதனைச் சாவடி ஊடாகச் செல்வதற்குப் படையினர் அனுமதி வழங்கியதாகத் தெரிவிக்கப்பட்டது. (03)

## முல்லைத்தீவு மாவட்டத்தில்
# 30 கரையோரக் கிராமங்களை புனரமைப்பதற்கு நடவடிக்கை

முல்லைத்தீவு—

முல்லைத்தீவு மாவட்டத்தில் சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட 30 கரையோரக் கிராமங்கள் புனரமைக்கப்படவுள்ளன. கரையோர சமுதாய அபிவிருத்தித் திட்டத்தின் கீழ், ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் இந்தப் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இந்தத் திட்டத்தின் கீழ் கரைதுறைப்பற்றில் 30 கிராமங்களும், புதுக்குடியிருப்பில் 06 கிராமங்களும் புனரமைக்கப்படவுள்ளதாக இந்தப் புனரமைப்புக்குப் பொறுப்பான பிரதித் திட்டப் பணிப்பாளர் என்.சிவலிங்கம் தெரிவித்தார்.

ஒரு கிராமத்துக்குக் குறைந்தது 50 லட்சம் ரூபா வீதம் செலவிடப்படவுள்ளது எனவும், சூழல் பாதுகாப்புத் தொடர்பாகக் கடல் அரிப்பைத் தடுக்கும் பணிகளுக்கு 25 லட்சம் ரூபா முதல் 50 லட்சம் ரூபா வரை செலவிடப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

இந்தக்கிராம மக்கள் தற்போது இடைத்தங்கல் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# திலீபன் மருத்துவ சேவை நிலையத்தில் கடந்த மாதம் 11,150 பேருக்கு சிகிச்சை

கிளிநொச்சி—

தமிழர் தாயகத்தில் இயங்கும் தியாக தீபம் திலீபன் மருத்துவ சேவை நிலையங்களில் கடந்த மாதம் 11,150 பேர் சிகிச்சை பெற்றுள்ளனர்.

'பூநகரி, கற்சிலைமடு, பிரமந்தனாறு, கதிரவெளி, நவ்வி, மாங்குளம், பன்சேனை, ஐயன்கன்குளம், ஆழியவளை, அளம்பில் ஆகிய இடங்களில் இயங்கும் திலீபன் மருத்துவமனையிலேயே இந்த நோயாளர்கள் சிகிச்சை பெற்றுள்ளனர்.

பூநகரியில் ஆயிரத்து 116 பேரும், கற்சிலைமடுவில் 2ஆயிரத்து 492 பேரும், பிரமந்தனாறில் ஆயிரத்து 782 பேரும், கதிரவெளியில் 385 பேரும், நவ்வியில் 360 பேரும், மாங்குளத்தில் ஆயிரத்து 221 பேரும், பன்சேனையில் 810 பேரும், ஐயன்கன் குளத்தில் 512 பேரும், ஆழியவளையில் 1098பேரும், அளம்பில் 1394 பேரும் சிகிச்சை பெற்றுள்ளனர்.

இவர்களில் வைரஸ் காய்ச்சலால் 1480 பேரும், சுவாசத்தொற்று நோயால் 1635 பேரும், தோல் நோய்களுக்கு 450 பேரும் என பல்வேறு நோய்களுக்கு மக்கள் சிகிச்சை பெற்றுள்ளனர்.

# சுற்றுச்சூழல் பாதிப்பு

முல்லைத்தீவு- திருமுறிகண்டிப் பிரதேசத்தில் அண்மைக்காலமாகச் சுற்றுச்சூழல் பாதிக்கப்பட்டுள்ளமை தமிழீழ சுகாதார சேவையால் இனங்காணப்பட்டுள்ளது.

இதனையடுத்து தமிழீழ சுகாதார சேவையின் ஒழுங்குபடுத்தலில், முல்லைத்தீவு மாவட்ட சுகாதார பணிமனையின் பொது சுகாதார பரிசோதகர்கள், கரைச்சிப் பிரதேச வீதி சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் மற்றும் மலேரியா தடை இயக்கப் பகுதியினரும் இணைந்து சூழலைப் பேணும் நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர்.

நீர் தேங்கிய நிலைகளில் நுளம்பு குடம்பிகளை அழிப்பதற்கு மருந்து விசிறல், நுளம்பு மருந்து விசிறல் என்பவற்றுடன், சிரமதானப்பணி மூலம் இந்தப் பிரதேசத்தில் கழிவகற்றல் என்பன நடைபெற்றது. அத்துடன் வர்த்தகர்களுக்குச் சுகாதார விழிப்புணர்வு குறித்த அறிவுறுத்தல்களும் வழங்கப்பட்டன.

# வலைகள் வழங்கல்

கிளிநொச்சி—

சுனாமியால் பாதிக்கப்பட்ட கடற்தொழிலாளர்களில் 15 பேருக்கு மீன்பிடி வலைகளை ஏ.எஸ்.பி. என்ற நிறுவனம் வழங்கியுள்ளது. நேற்று காலை 10.30 மணிக்கு இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கரைச்சிப் பிரதேச ஆணையாளர் பொன்.நித்தியானந்தன், அரசசார்பற்ற இணையங்களின் தலைவர் இ. கணேசபிள்ளை, ஏ.எஸ்.பி இணையத்தின் பிரதிநிதிகள் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.






வவுனியா - வைரவப்புளியங்குளம் பிரதேசத்தில் கிராம அலுவலர் வீ.ஜெகசோதிநாதன் இடமாற்றம் பெற்றுச் செல்வதையிட்டு, பிரியாவிடை வைபவம் அண்மையில் வவுனியா முத்தையா மண்டபத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும், சிவநெறி புலவர் சி.ஏ.இராமசாமியால் வழங்கப்பட்ட வாழ்த்துப்பாவை வவுனியா பிரதேச செயலர் சுகந்தி துரைசாமி வழங்குவதையும் படத்தில் காணலாம்.

படம் :- கனகரவி

# பண்டார வன்னியன் நினைவு நாள் நிகழ்வு

முல்லைத்தீவு—

வன்னியின் இறுதி மன்னன் பண்டார வன்னியன் நினைவு நாள் - எதிர்வரும் 25ஆம் திகதி முல்லைத்தீவு கற்சிலைமடுவில், முல்லைத்தீவு அரச அதிபர் இமெல்டா சுகுமார் தலைமையில் இடம்பெறவுள்ளது.

கற்சிலைமடுவில் மாவீரன் பண்டார வன்னியன் சிலை அமைந்துள்ள வளாகத்திலேயே இந்த நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

மாவீரன் பண்டாரவன்னியன் - ஆங்கிலேய படைத் தளபதிகளால் தோற்கடிக்கப்பட்டதை அடையாளப்படுத்தும் நினைவுக்கல் கற்சிலை மடுவில் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# காலச் சுவட்டில்...

## இன்றைய நாளில் அன்று நிகழ்ந்தவை

### ஓகஸ்ட் - 17

1807: அமெரிக்காவின் முதலாவது நீராவிப் படகின் வெள்ளோட்டம் ஹட்சன் நதியில் நடைபெற்றது. ரொபர்ட் ஃபுல்ட்டன் வடிவமைத்த செர்மாண்ட் எனப் பெயரிடப்பட்ட இந்தப் படகின் வெள்ளோட்டத்தை ஆயிரக்கணக்கான மக்கள் கண்டு வியந்தனர்.

1836: பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தால் பிறப்பு, இறப்பு பதிவுச் சட்டமும், திருமணப் பதிவுச் சட்டமும் நிறைவேற்றப்பட்டது.

1850: நவீன நாவல் இலக்கியத்தின் தந்தை என்று போற்றப்படும் உலகப் புகழ்பெற்ற பிரான்ஸிய நாவலாசிரியர் ஹானர் - டி - பால்ஸாக் காலமானார்.

1877: முதன் முதலாகத் தொலைபேசித் தொடர்பகம் ஹனெக்டிக்கட்டில் ஹார்ட் ஃபோர்ட் என்ற இடத்தில் அமைக்கப்பட்டது.

1918: ஆண்கள் புரியும் தொழில்களையே புரிந்து வரும் பெண்களுக்கும், ஆண்களுக்கு நிகரான சம ஊதியம் தருமாறு கோரி வேலை நிறுத்தங்கள் பிரிட்டனில் ஆரம்பமாகின.

1941: வின்சண்ட் சர்ச்சிலும், ரூஸ்வெல்ட்டும் நியூபவுண்ட்லாந்து அருகே சந்தித்துப் பேசினர். இதனைத் தொடர்ந்து ஜப்பானுக்கு - அமெரிக்கா கடும் எச்சரிக்கையை விடுத்தது.

1945: ஜப்பானுக்குச் செல்லும் வழியில் நேதாஜி சுபாஸ் சந்திரபோஸ் சென்ற விமானம் - தாய்வான் அருகே விபத்துக்குள்ளாகி நொருங்கி வீழ்ந்ததில், அவர் இறந்ததாக அறிவிக்கப்பட்டது.

★: ஐக்கிய நாடுகள் சபையின் தலையீடுகாரணமாக இந்தோனேசியா - ஒல்லாந்தரது ஆதிக்கத்திலிருந்து விடுதலை அடைந்தது.

1960: பிரான்ஸின் ஆதிக்கத்திலிருந்து காபன் சுதந்திரமடைந்தது.

1961: கிழக்கு ஜேர்மனி பேர்லின் சுவரைக் கட்ட ஆரம்பித்தது.

1966: அமெரிக்காவால் பயோனீர் - 7 என்ற விண்கலம் ஏவுப்பட்டது. சூரிய காற்றுப் பற்றியும், கோள்களுக்கு இடையேயுள்ள சூழ்நிலைகள் பற்றியும் ஆராய்வதே இதனது நோக்கமாகும்.

1970: ரஷ்யா வெள்ளிக்கிரக ஆய்வுக்காக வெனீரா - 7 என்ற விண்கலத்தை அனுப்பியது. இது வெள்ளிக்கிரகத்தில் வெற்றிகரமாகத் தரையிறங்கியது.

1976: நில நடுக்கத்தையடுத்து கடல் பொங்கியதில் (சுனாமி ஏற்பட்டதனால்) பிலிப்பைன்ஸ் நாட்டின் மிண்டானோ தீவில் ஐயாயிரத்துக்கும் மேற்பட்டோர் இறந்துபோயினர்.

1977: அணுசக்தியால் இயங்கும் ரஷ்யாவின் ஆர்ட்டிகா எனப்படும் பனிக்கட்டி உடைக்கும் கப்பல், ஆர்ட்டிக் கடலின் பனிப்பாளங்களைப் பிளந்து கொண்டு வடதுருவத்தைச் சென்றடைந்தது.

1983: அரைத்திரவ ( Semi Liquid) எரிபொருளால் இயங்கிய கிரீட் - 9 என்ற விண்கலம் ரஷ்யாவால் செலுத்தப்பட்டது.

1988: பாகிஸ்தான் அதிபர் ஷியா - உல் - ஹக், அமெரிக்கத் தூதர் ஆர்னல்ட்எல் ரஃபீல் ஆகியோர் உட்பட முப்பது பேர்கள் பயணித்துக் கொண்டிருந்த விமானம் பாகிஸ்தான் மூல்டான் அருகே வானில் வெடித்துச் சிதறியது. இந்தச் சம்பவத்தில் அனைவரும் கொல்லப்பட்டனர்.

★: இந்தோனேசியா சுதந்திரதினம்.

★: காபன் சுதந்திரதினம்.

தொகுப்பு - சந்துரு

நமது ஈழநாடு

வைர வரிகள்

முடிவெடுப்பதைவிட முக்கியமானது அந்த முடிவைப் பிறர் ஏற்கச் செய்வது, முடிவுகளைச் செயற்படுத்துவது.

- தியபோா

## நமது நோக்கு

### நழுவிப்போகும் நம்பிக்கைகள்....!

லக்ஷ்மன் கதிர்காமர் கொல்லப்பட்டதையடுத்து ஏற்பட்டுள்ள சூழ்நிலை - முன்னர் ஐக்கிய தேசிய முன்னணி ஆட்சிக் காலத்தில் ஆரம்பிக்கப்பட்டு தேக்கநிலை அடைந்துள்ள சமாதானப் பேச்சுவார்த்தையின் எதிர்கால நகர்வுகள் குறித்து பல்வேறு சந்தேகங்கள் நிலவிவரும் சூழலில், சமாதானப் பேச்சுக்கள் குறித்த விடயங்களை மீளாய்வு செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டிருப்பதாக அரச சமாதானப் பணிப்பாளர் தெரிவித்திருப்பதானது - அதனை உறுதிசெய்வதாக அமைந்துள்ளது என்றே எண்ணத் தோன்றுகின்றது.

ஏற்கனவே கடந்தசில வாரங்களாக புரிந்துணர்வு உடன்பாட்டை மீளாய்வு செய்யவேண்டுமென அரச தரப்பிலிருந்து கோரிக்கை விடுக்கப்பட்டுவரும் நிலையில் - இந்தப் புதிய அறிவிப்பு, மேலும் சமாதான முயற்சிகளுக்கு சிக்கலை ஏற்படுத்தும் ஒன்றாகவே அமைந்துள்ளது.

புதிய அரசு பதவியேற்ற காலம்முதலே சமாதான முயற்சிகள் எந்தவகையிலும் முன்னெடுக்கப்படவில்லை என்பதும், புரிந்துணர்வு மற்றும் போர்நிறுத்த உடன்பாட்டுக்கு எதிரான சக்திகளே பெருமளவுக்கு அரசின் முக்கிய அமைச்சுப் பதவிகளில் இருந்ததால், அமைதி உடன்பாட்டின் விதிமுறைகள் எதையும் அரசதரப்பினர் நியாயமான முறையில் அமுல்செய்யவில்லை என்பதும், இதன்காரணமாக கடந்த ஒன்றரை ஆண்டு காலமாக சமாதானப் புறாவின் குரல்வளை கட்டம் கட்டமாக நெரிக்கப்பட்டுவந்த நிலையில், இப்போது மூச்சுத் திணறும் நிலைக்கு வந்துள்ளதென்பதும் வெளிப்படையான உண்மையேயாகும்.

ஜனாதிபதி - புறத்தே சமாதான ஆர்வலராக, போர்நிறுத்த உடன்பாட்டைப் பேணுபவராகக் காட்டிக் கொண்டாலும்கூட உள்ளூர - அதாவது, ஆத்மார்த்தமாக அவர் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு அவர்களின் குறைந்தபட்ச அபிலாஷைகளைக்கூட நிறைவேற்றி வைக்கும் வரையில் பேச்சுவார்த்தைகள் மூலம் ஒரு உறுதியும், இறுதியுமான தீர்வொன்றினைக் காணும் மனோதர்மம் கொண்டவராக ஒருபோதுமே இருந்ததில்லை.

சமாதான முயற்சிகளில் ஈடுபட்ட ஒவ்வொரு காலகட்டத்திலும் அவர் ஏமாற்றிக் காலம் கடத்தும் தந்திரோபாய உத்திகளின் அடிப்படையிலேயே பேச்சுவார்த்தை நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்தார் என்பதும் அனைவரும் அறிந்த விடயமே.

அவரின் இந்த சுயநல உள்நோக்கங்களுடன் கூடியதான மூலோபாயங்கள் எப்போதுமே சமாதான முயற்சிகளுக்கு எந்த வகையிலும் ஆக்கபூர்வமான உதவிகளை வழங்கியதும் இல்லை, அவரது சக பங்காளிகள் அதற்கு அவரை ஒரு போதும் அனுமதித்ததுமில்லை.

இதுவே, இந்த நாட்டில் அமைதியின்மை நிரந்தரமான துயரமாக மாறியுள்ளமைக்கும் ஒரே காரணமாகும்.

இந்த அமைதியின்மை இருக்கும்வரைதான் தமது அரசியல் வாழ்வைத் தொடரமுடியும் என நம்பும் தென்னிலங்கை அரசியல் தலைமைகளின் தொலைநோக்குச் சிந்தனையற்ற அரசியல் கூட்டுக்களின் அரங்கமாக இலங்கை மாறிவிட்டமை கவலைக்குரியதே.

அடுத்து - மீண்டும் தேர்தல்கள் வருவதற்கான சமிக்ஞைகள் உறுதியாகத் தெரியத் தொடங்கியுள்ள நிலையில், பேரினவாதிகளின் அரசியல் சுயநலம் என்பது அதன் உச்சத்தைத் தொட ஆரம்பிக்கப்போகிறது என்பதும் உறுதியே.

ஆகவே, இந்தநிலை சமாதானத்தை எந்தவிதத்திலும் நியாயபூர்வமாக ஆதரிக்கும் நிலையாக இருக்கவிடப்போவது கிடையாது.

தேர்தல் முடிந்து புதிய அரசொன்று பதவியேற்கும்வரை அல்லது புதிய ஜனாதிபதி பதவிப்பிரமாணம் செய்துகொள்ளும்வரை 'பேரினவாதமே' கொடிகட்டிப்பறக்கப்போகிறது.

ஆட்சி அதிகாரத்தை தம்வசம் கைப்பற்றிக்கொள்ளும் வரை பிரதான சிங்களக் கட்சிகளின் தலைவர்களுக்கு சமாதானம் குறித்துச் சிந்திக்கவோ, பேசவோ முடியாது. அது அவர்களின் அரசியல் இலக்கை எட்டும் முயற்சிக்கு பாதிப்பை ஏற்படுத்திவிடுமென்றே அவர்கள் அஞ்சுவார்கள். அதுவே வழக்கமுமாகும்.

இந்தநிலையில், போர்நிறுத்த - புரிந்துணர்வு உடன்பாடு மீளாய்வு செய்யவேண்டும், பேச்சுவார்த்தைகள் குறித்து மறுபரிசீலனை செய்யவேண்டும், பொதுக்கட்டமைப்பு உடன்பாட்டுக்கு திருத்தம் கொண்டுவரவேண்டும் என்ற கோரிக்கைகள் எழத்தொடங்கியிருப்பது அதிசயமான விடயமல்ல.

இந்தக் கோரிக்கைகள் மற்றும் அறிவிப்புக்கள் சொல்லும் செய்திகள் -

- போர்நிறுத்த - புரிந்துணர்வு உடன்பாடு முழுமையாக நெருக்கடிக்குள்ளாகப்போகிறது -


- பேச்சுவார்த்தை மூலமான சமாதான நகர்வுகள் இப்போதைக்கு எந்தவகையிலும் முன்னெடுக்கப்படும் சாத்தியம் இல்லை -

- பொதுக்கட்டமைப்பு இயங்குவதற்கான சமிக்ஞை எதுவும் தென்படவில்லை... என்பவையேயாகும்.

இது இந்த நாடும் மக்களும் அமைதி குறித்த நம்பிக்கைகளைக் கைவிடும் நிலையைத் தோற்றுவித்துள்ளது என்றே கூறவேண்டும்.

267, Navalar Road,
Jaffna.
T.P. - 021-2225107
www.eezhanaadu.com

## நாடும் நடப்பும்




### 'ஊர்சுற்றி' யார் பார்வையில்...

# பருத்தி ஆடைகளாகவும் காய்த்து தொங்கியதை கண்டேன் மடுக்காட்டில்!

"பருத்தி புடவையாய்க் காய்த்த மாதிரி" என்றொரு பழமொழி தமிழில் வழங்கப்படுவதுண்டு. புடவைகள் மட்டுமல்ல ஆடைகள் பல வர்ணங்களில் விதவிதமான வடிவங்களில் மரங்களில் அதுவும் அடர்ந்த காட்டுப் பகுதியில் காட்சியளித்துக் கொண்டிருந்ததைப் பார்க்கும் வாய்ப்பு கடந்த சில தினங்களில் எனக்குக் கிடைத்தது என்று என் முன்னே வந்துஉட்கார்ந்திருந்த நண்பர் பரமசிவத்திடம் சொன்னேன்.

திடீரென்று காணாமல் போவீர் பின்னர் நீர் தோன்றியதும் இப்படி ஏதாவது கதை விடுவீர் என்பது எனக்குத் தெரிந்தது தான். சரி நீர் சொல்லவந்ததைச் சொல்லும் என்றார் பரமசிவம். பருத்தி புடவையாய்க் காய்த்திருந்ததை எந்தக் காட்டில் பார்த்தீர் என்று அவரே கதையைத் தூண்டிவிட்டார்.

கொழும்புக்கு ஒரு அலுவலாகச் சென்றிருந்த நான் அங்கிருந்து மடுமாதா நவநாள் விழாவுக்கு யாத்திரை புறப்பட்ட ஒரு குடும்பம் என்னையும் அழைத்துச் சென்றது. மடுவுக்குப் போவதற்கு உயிலங்குளம் பாதையை அன்றைய தினம் படையினர் மூடிவிட்டனர். கதிர்காமரின் கொலையாளியைக் கண்டு பிடிப்பதற்காக வழி நெடுகிலும் குறிப்பாக கட்டுநாயக்கா விமான நிலையம் வரை பல இடங்களில் கடுமையான சோதனை! உயிலங்குளம் பாதையை மூடியதால் மடுச்சந்தியால் தான் மடுமாதா கோயிலுக்குச் செல்ல வேண்டியிருந்தது. இந்தக் காட்டுப் பகுதிக்கு பஸ் வண்டிகள், மோட்டார் வான்கள், புதிய புதிய ரக மோட்டார் கார்கள், மோட்டார்சைக்கிள்கள், லொறிகள், ஓட்டோக்கள் என்று பலவிதமான வாகனங்களும், காடுகளுக்குள் வந்து குவிந்து எங்கும் வாகனங்களாகவே காட்சியளித்தன. எங்கெல்லாம் இடம் கிடைக்குதோ அங்கெல்லாம் கூடாரம் அடித்துக் குந்திக் கொண்டார்கள். கூடாரங்களில் தான் எத்தனை வகை? சுனாமி அகதிகளுக்கும் போரினால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் வெளி நாடுகள் உதவியாக வழங்கிய கூடாரங்கள் பலவும் மடுக்காட்டில் காட்சியளித்தன. மரங்களில் பலவர்ணங்களில் ஆடைகள் மறைவுக்காக மட்டுமல்ல தோய்த்து உலரவும் விடப்பட்டிருந்தன. மரங்களில் எல்லாம் ஆடைகள் தொங்கியதால் பருத்தி புடவையாய் மட்டும் காய்க்கவில்லை, ஆடைகளாகவும் அந்தக் காடுகளில் காட்சியளித்ததால் பருத்தி ஆடைகளாகவும் காய்த்ததைப் பார்த்தேன் என்று சொன்னேன் என்றதும் பரமசிவம் குறுக்கிட்டு மிருகங்கள் எதையும் பார்க்கவில்லையோ என்று கேட்டார்.

மருத மடுக்காடு யானைக்காடு என்று சொன்னவர்கள். மமமரத்தை மறைத்தது மாமதயானை, மரத்தில் மறைந்தது மாமதயானைடுடு என்று யாரோ ஒரு புலவன் சொல்லியிருந்தான். மருதமடுக்காட்டில் மாதா திருநாளுக்காக மக்கள் பெருமளவில் குவிந்துவிட்டதால் மிருகங்கள் மட்டுமல்ல கொடிய விஷப் பாம்புகள் கூட அந்தப் பகுதியிலேயே இல்லாமல் போய்ப் பதுங்கிக் கொண்டன போலும் என்றேன்.

தங்களை விட மோசமான விஷமுள்ள மனிதர்கள் காடுகளுக்குள் வந்துவிட்டார்கள் என்று அவை உம்மைப் போன்றவர்களைப் பார்த்து ஓடிப் பதுங்கியிருக்க வேண்டும் என்று பரமசிவம் என்னைச் சீண்டினார்.

மூன்று லட்சத்துக்கு மேற்பட்ட மக்கள் மருதமடுக்காட்டுக்குள் சில தின்ங்களுக்கு வாசம் செய்ய வந்திருந்தனர். அடுத்தவன் அருகே முகாம் அமைக்கப் போகிறான். அவனுக்கும் போகவ்ருவதற்கு இடம் வேண்டுமே என்று எவரும் கவலைப்படுவதாகக் காணோம். தாம் தமக்கு வசதியாக முகாம் அமைப்பதில் முந்தினர் மற்றவர்களும் இப்படியே முகாம் அமைத்துக் கொண்டார்கள். எப்படியோ ஒவ்வொருவரும் தங்கள் முகாம்களுக்குள் போய் வந்து கொண்டிருந்தனர். ஒவ்வொரு முகாமிலும் சமையலும் நடக்கும். சாப்பாடும் நடக்கும் இதுமட்டுமல்ல சிங்கள மக்களும் குடும்பம் குடும்பமாக வந்து முகாம் போட்டனர். சிங்களவர்களும், தமிழர்களும் அருகருகே முகாம் அமைத்துக்கொண்டிருந்தனர். சிலர் பேசிப் பழகிக்கொண்டனர். திருப்பலிப் பூசையில் பாதிரியார், ஒருவருக்கொருவர் சமாதானம் சொல்லிக்கொள்ளுவோம் என்று சொல்லும்போது அடுத்தவரைப் பார்த்துத் தலையை ஆட்டிக்கொள்ளு வார்கள். சீட்டாடுதல், விளையாட்டுகள் எதுவும் கிடையாது. மதுபானத்துக்குத் தடை என்று ஒவ்வொரு இடத்திலும் அறிவித்தல் பலகைகள் காணப்பட்டன. பக்தி சிரத்தையுடன் பிரார்த்தனையில் ஈடுபட்டவர்கள் தொகை மிகக்குறைவு. இதை ஒரு உல்லாச யாத்திரையாகக் களித்தவர்களும் உண்டு. ஆனாலும் கட்டுப்பாடு நிலவியது. மரியாதையாக ஆடையணிந்துவருமாறும் ஒருதடவை அறிவிக்கப்பட்டது. என்றாலும் விதவிதமாகப் பலவர்ணங்களில் ஆடைகள் அணிந்து கூட்டம் கூட்டமாக நடைபயின்றவர்களையும் காணக்கூடியதாக இருந்தது. பூசை நேரத்தில் கடைகளில் வியாபாரம் நிறுத்திவைக்கப்பட்டிருந்தது. சகலவிதமான பொருட்களும் அந்த மருதமடுக் காட்டுப்பகுதியில் சில தினங்கள் தாராளமாகக் கிடைத்தன. கருவாட்டுக் கடைகளில் சிங்கள மக்கள் கூட்டம் நிறைந்திருந்தது. உணவுச் சாலைகள் நிரைம்பி வழிந்தன. தண்ணீர் தாராளமாகக் குழாய்களிலும், கிணறுகளிலும் கிடைத்தது. ஆனால் மக்கள் முண்டியடித்து விரயம் செய்த காட்சிகளும் உண்டு. நவநாளின் கடைசிநாள் திருப்பலிப்பூசை முடிந்ததும் மக்கள் உணவு விடுதிகளில் முற்றுகையிட்டும் போதிய உணவு கிடைக்கவில்லை. பாணுக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டது. இது வருடாவருடம் நடைபெறும் நிகழ்ச்சிதான். அடுத்த வருடமாவது பொது அமைப்புகளோ, தேவாலய நிர்வாகமோ ஒரு சாம்பாருடன் சோற்றுப் பார்சல் தயாரித்து இலவசமாகவோ அல்லது விலைக்கோ பரவலாக விநியோகித்தால் விழாவுக்கு வரும் யாத்திரிகர்களுக்கு வசதியாக இருக்கும் என்று ஓர் அன்பர் யோசனை சொன்னார். மடுத்திருநாள் முடிவில் இறைச்சிக் கடைகளிலும் மீன் கடைகளிலும் சொல்ல முடியாத அளவுக்குக் கூட் டம் வியாபாரமும் அப்படித்தான் என்று நான் சொன் னேன்.

நிரந்தரமான நீதியான சமாதானம் நிலவவேண்டும். இதுவே மருதமடுத் திருநாளின் பிரார்த்தனையாக இருந்தது என்று அங்கிருந்து வந்தவர்கள் சொல்கிறார்கள். நீரும் அப்படிப் பிரார்த்தித்தீரா என்று கெட்டார் பரமசிவம்.

நல்ல காலம் நீர் என்னுடன் அங்கு வரவில்லை. நீர் வந்திருந்தால் எனக்குச் சமாதானம் இல்லாமல் போயிருக்கும் என்றேன்.

கத்தோலிக்கர் அல்லாத நீர் அங்கேபோய் என்ன செய்தீர் என்றார் பரமசிவம்.

இந்துக்கள் சைவர்கள்தான் அங்குவந்து உண்மையாகப் பிரார்த்தனை செய்து நேர்த்திக் கடன் செலுத்துகிறார்கள். எங்கள் ஆட்களில் பெரும்பாலானவர்கள் இதை ஒரு கேளிக்கை விழாவாகக் கருதி நடந்து கொள்கிறார்கள் என்பது ஒரு கத்தோலிக்க அன்பர் என்னிடம் சொன்னதைச் சொன்னேன். சற் பிரசாதம் வழங்கப்பட்ட சமயத்தில் கத்தோலிக்கர் அல்லாதவர்கள் தயவுசெய்து சற்பிரசாதம் பெறவேண்டாம் என்று அறிவிக்கப்பட்டதையும் நான் சொன்னேன். இதிலிருந்து எத்தனை சைவர்கள் அங்குவந்திருந்தார்கள் என்பது தெரியவில்லையா? என்று கேட்டேன். சைவர்கள் எதிலும் கடவுளைக் காண்பவர்கள். அவர்கள் சமய பேதம் பார்ப்பதில்லை என்று சொல்லி நடந்தார் பரமசிவம்.

முதியோர் இல்லத்தில் ஒரு கணப்பொழுது.

-க.நிமலன் - வரணி

# வழிகாட்டிகளாக செயற்படவேண்டியவர்கள் மூலைகளில் முடக்கிவிடப்படுவது ஏன்...?





ஒருவருடைய வாழ்க்கையில் கருவறை தொடக்கம் கல்லறை வரை என்றும் நினைவு கூரப் படவேண்டியவர்கள் பெற்றோர்கள். தன் உயிரிலும் மேலாக இன்னொரு உயிரை மதித்து, பாலூட்டிச் சீராட்டி வளர்த்தவள் எம் அன்னை. எமது வளர்ச்சியில் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாகத் தன்னை அர்ப்பணித்துக் கொண்டவர் எம் தந்தை. இதனால் தான் ஔவையாரும் 'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வங்கள்' என்று பாடினார். எனவே அன்னையும், பிதாவும் தெய்வத்துக்குச் சமமாக மதிக்கப்பட வேண்டியவர்கள்

ஆனால் இன்றைய சமூகத்தில் பெற்றோருக்குக் கிடைக்கும் மதிப்பும், மரியாதையும் எந்தளவு என்று பார்ப்போமேயானால், அது இல்லையென்று தான் சொல்ல வேண்டும். ஒரு பிள்ளையைப் பெற்று வளர்ப்பதில் அளவற்ற துன்பங்களை அனுபவிக்கிறார்கள் பெற்றோர்கள். ஆனால் அந்தப் பிள்ளைகள், வளர்ந்து பெரியவர்களானவுடன் என்ன செய்கிறார்கள்? ஒரு சிலரைத் தவிர, ஏனையோர்கள் பெற்றோரைத் திரும்பிக் கூடப் பார்ப்பதில்லை.

ஆண்களாயினும் சரி, பெண்களாயினும் சரி வாலிப வயதை அடைந்தவுடன் இனி எங்களுக்கு பெற்றோரது அன்பு, ஆதரவு, உதவிகள் எல்லாம் தேவையில்லை ஏனத் தப்பாக நினைத்துக் கொள்கிறார்கள். அதிலிருந்து படிப்படியாக வளர்ச்சியடைந்து திருமணம் என்ற பந்தத்துள் நுழைந்துவிட்டவுடன், பெண்கள் தமது கணவன்மாரின் சொல்லைத் தாரக மந்திரமாக எடுத்துக் கொள்வதும், மாறாகக் கணவன் - மனைவியின் பேச்சைத் தட்ட முடியாதவனாகி செயற்படுவதனாலும், பெற்றோர்களை இவர்கள் அடியோடு மறந்து விடுகிறார்கள். தாங்கள் இருவருமே இந்தச் சமூகத்தின் ஜாம்பவான்கள் என தப்புக்கணக்குப் போட்டுக் கொள்கிறார்கள். இருந்தும் தம் பெற்றோரை இரு கண்களாக மதிக்கும் பிள்ளைகளும் எங்கள் சமூகத்தில் இல்லாமல் இல்லை.

அன்பையும், பாசத்தையும் ஊட்டி ஊட்டி வளர்த்தவர்கள் இன்று அநாதரவானநிலையிலே காலத்தைப் போக்கும் நிலை எமது சமூகத்திலே காணப்படுகிறது. 'முதுமை' என்பதை இன்றைய இளைஞர்கள் வேண்டாப் பொருளாகவே பார்க்கிறார்கள். 'கிழடு' என்று அநாகரிக வார்த்தையால் நச்சரித்து வருகின்றனர். இந்த நிலை இன்றைய சமூகத்தில் ஆண்பிள்ளைகளிடம் மட்டுமல்ல, பெண்பிள்ளைகளிடமும் காணப்படுகிறது. முதுமையின் தார்ப்பரியங்களை அறியாத இவர்கள் - தங்கள் பெற்றோர்களை மூலையில் கிடக்கவும் வைக்கிறார்கள்.

இத்தகைய காரணங்களால் தானோ, என்னவோ நாட்டில் வயோதிபர் இல்லங்களும் அதிகரித்துவிட்டன. அங்கு வாழும் முதியவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்துவிட்டது.

அண்மையில் கைதடிப்பகுதியில் அமைந்துள்ள முதியோர் இல்லத்துக்கு விசேட செயற்திட்டம் ஒன்றை நிறைவேற்றுவதற்காகச் செல்லும் வாய்ப்புக்கிட்டியது எனக்கு. அதில் நான் பார்த்து அனுபவித்த சில சம்பவங்களை உங்களோடு பகிர்ந்து கொள்ளலாம் என நினைக்கிறேன்.

இன்றைய உலகம் பல துறைகளில் வளர்ந்து எங்கேயோ போய்க் கொண்டிருக்கிறது. இதனை நாம் கண்களூடாகப் பார்த்தும், அனுபவித்தும் வருகிறோம். ஆனால் மனிதர்களது மனங்களும் ஏன் இப்படி மாறிவிட வேண்டும் என எண்ணத் தோன்றுகிறது. பத்துமாதம் கருவறையில் சுமந்து பாலூட்டிச் சீராட்டி எம்மை வளர்த்து எடுத்த தாயையும் தந்தையையும், மறந்து விட்டார்களே இந்தக் கல் நெஞ்சம் படைத்தவர்கள். இதனை நினைத்தால் வெந்த புண்ணில் வேலைப் பாய்ச்சுவது மாதிரி இருக்கிறது. ஏன் அன்பு பாசம், கருணை, இரக்கம் எல்லாம் இவர்களது பிள்ளைகளுக்கு இல்லையா?

இந்த முதியோர் இல்லத்தில் எண்பதுக்கும் மேற்பட்ட முதியவர்கள் காணப்படுகிறார்கள். ஆண், பெண் என இருபாலாரும் இதனுள் அடங்குகின்றனர். சாதி, மத, மொழி வேறுபாடின்றி அனைவரும் சமமாகவே மதிக்கப்படுகிறார்கள். இவர்களில் பெரும்பாலானோர் தங்கள் பிள்ளைகளாலேயே கொண்டு வந்து சேர்க்கப்பட்டவர்கள். பிள்ளைகளால் கைவிடப்பட்ட நிலையில், சமூகத்தவர்களால் கொண்டுவந்து சேர்க்கப்பட்டவர்களும் அடங்குகின்றனர்.

இவர்களுக்குத் தேவையான சகல வசதி வாய்ப்புகளும் இங்கு வழங்கப்படுகிறது. நேரத்துக்குச் சாப்பாடு, அன்பான பராமரிப்பு, அவ்வரவர் மத வழிபாட்டுக்கென ஒதுக்கப்பட்ட இடங்கள், பொழுது போக்குக்கு மரச் சோலைகள், பூஞ்சோலைகள் நிறைந்த இடங்கள் என்பன காணப்படுகின்றன. இவை என்னதான் இருந்தும் இவர்களது முகத்தில் ஒரு வித ஏக்க உணர்வு எந்தநேரமும் தென்படுவதை என்னால் உணர முடிந்தது. ஏதோ ஒன்றை நினைத்து ஏங்குபவர்களாகவே இவர்கள் காணப்படுகிறார்கள். தம் பிள்ளைகளுடன்கூடியிருந்து வாழ்வை அனுபவிப்பதில் கிடைப்பது போன்ற உள ரீதியான திருப்தி இவர்களுக்குக் கிடைக்குமா? நிச்சயமாக இல்லை.

தம் உயிரிலும் மேலான இனிய உறவுகளை எண்ணி, வழி மேல் விழி வைத்து நுழைவாயிலைப் பார்த்தபடி இருக்கிறார்கள். யார் தான் இவர்களுக்கு ஆறுதல் கூறுவது. ஒரு மூதாட்டியினது உளரீதியான ஏக்கம்! எனக்கு இரண்டு மகன்மார். மூத்தவர் கனடாவில் இருக்கிறார். இரண்டாவது மகன் யாழ்ப்பாணத்தில் தான். கல்யாணம் செய்து கொடுத்த கையோட என்னைக் கொண்டு வந்து இங்க விட்டிட்டார். இங்க வாறதும் இல்லை. பார்க்கிறதும் இல்லை. அவர் வந்து இண்டைக்கு ஒன்றரை வருசமாச்சுது. பணம் இருந்தும் என்ன தம்பி! என பெருமூச்சு விட்டு அழுகிறார். பாருங்கள் இந்தப் பெற்றோரது பிள்ளைகளை. யார் இவர்களிடம் போய் நியாயம் கற்பிப்பது.

இதே போல இன்னொரு வயோதிபர் இப்படிக் கூறுகிறார் - எனக்கு ஒரேயொரு மகன். அவன் விரும்பி மருமகள் ஒன்றைக் கூட்டிக்கொண்டு வந்தான். நானும் வெளிக்கிட்டு இஞ்சை வந்திட்டன் என நகைச்சுவையாக தனது கதையைக் கூறி முடித்தார். இப்படி அங்கு வாழும் முதியவர்கள் ஒவ்வொருவரதும் வாழ்க்கையின் துயரச்சம்பவங்கள் ஏராளம் எராளம்.


இங்கு வசிக்கும் முதியவர்களைப் பிள்ளைகள் சுமைகளாக நினைத்துவிட்டார்கள் போலத் தெரிகிறது. இப்படியாகப் பிள்ளைகளால் வெறுத்தொதுக்கப்பட்ட நிலையில்க் கூட பிள்ளைகளின் அன்பு, பாசத்துக்காக ஏங்குபவர்களாகவே இவர்கள் காணப்படுகிறார்கள். உணவருந்தும் வேளையிலும், பொழுதைக் கழிக்கும் நேரங்களிலும் சில பெற்றோர்கள் பிள்ளைகளை நினைத்து அழுகிறார்கள். சிலர் தனியாக இருந்து சிரிக்கிறார்கள். ஏன் இவர்களுக்கு இந்த நிலை. மாறாக பிள்ளைகளை ஏன் திட்டித்தீர்க்கவில்லை. அன்பு, பாசம் என்பது பெற்றோருக்கு மட்டும் தானா? பிள்ளைகளிடம் இல்லையா? என எண்ணத் தோன்றுகிறதல்லவா.

இங்கு வாழும் முதியவர்களது பிள்ளைகள் எல்லோரும் உயர் தொழில் பார்ப்பவர்களும், உயர்ந்த வருமானம் உடையவர்களுமே. ஏன் இவர்கள் தங்கள் பெற்றோர்களைக் கவனிக்கவில்லை. தன்னிடம் உள்ள பணம் முழுவதையும் பிள்ளைகளின் வளர்ச்சிக்காக செலவளித்த இவர்களுக்கு - விமோசனம் என்பது முதியோர் இல்லமா? இவர்களது தேவைகள் எல்லாம் இங்கு நிறை வேற்றப்பட்டாலும் அன்பு, பாசம் போன்ற உளத் தேவைகளை வேறு யாராலும் வழங்க முடியுமா?

தன்னிடம் உள்ள உதிரத்தையே பாலாகச் சொரிந்த அன்னைக்கு நாம் உதவாக்கரைகளாகச் செயற்படுவது எந்த வகையில் நியாயம். தன் பிள்ளைகளை சமூகத்தின் நற்பிரஜைகளாக வளர்த்த அன்னைக்கும், தந்தைக்கும் கிடைத்தது வெறும் கானல் நீர் போன்ற வாழ்க்கையே. இதனை இன்றைய இளையவர்களே உங்கள் சிந்தையில் எடுத்துச் சிந்தித்துப்பாருங்கள்.

இவைகள் அனைத்தும் இன்றைய பெற்றோர்களுக்கும் நற்பாடமாக அமைந்து கொள்ளட்டும். நிகழ்காலப் பெற்றோரே உங்கள் எதிர்கால வாழ்க்கையின் நலனைக் கருத்திற் கொண்டு, உங்கள் பிள்ளைகளின் ஆடம்பரமான வாழ்க்கைக்காகச் செலவழிப்பதை விடுத்து, உங்களதும், உங்கள் பிள்ளைகளதும் எதிர்காலம் நோக்கிச் சிந்தித்துப் பாருங்கள். அது மட்டுமன்றி உங்கள் பிள்ளைகளோடு நீங்களும் ஒரு தடவை முதியோர் இல்லம் சென்று வாருங்கள். ஏனெனில் இனியும் எமது சமூகத்தில் முதியோர் இல்லங்கள் பல தோன்றாமல் இருக்க வேண்டும்.

## புதிய புத்தகங்கள்



நூலின் பெயர் :- ஸ்ரீ புவனேஸ்வரி அஷ்டகம்

ஆக்கியோன் :- வியாகரண சிரோமணி சிவஸ்ரீ பூரணதியாகராஜக் குருக்கள் (B.A Hons)

மொழி :- சமஸ்கிருதமும், தமிழும்

வெளியீடு :- ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் தேவஸ்தானம் சுதுமலை.

சக்தி இல்லையேல் சிவம் இல்லை. அம்பிகையை சரண் அடைந்தால், அதிகவரம் பெறலாம் என்பதற்குஏற்ப, வலிகாமத்தில் அம்பாள் ஆலயங்களிலே மிகவும் பிரபலமிக்க சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலயம் பல நூற்றாண்டுகளுக்குமேலாக தான்தோன்றீஸ்வரியாக தோன்றி அருள்பாலித்து வருகின்றாள்.

வைகாசி மாதத்தில் வருகின்ற பூரணையுடன் கூடிய விசாக நட்சத்திரத்தில் அம்பாளுக்கு தீர்த்தத் திருவிழா நடைபெற்றுவருவது வழக்கமாகும். இந்த வருடமும் நடைபெற்று முடிந்த மஹோற்சவத்தின் ஆரம்ப நாளாகிய கொடியேற்றத்தன்று மட்டக்களப்பை சேர்ந்த பிரபல சமஸ்கிருத விற்பன்னராகிய சிவாச்சார்ய கலாநிதி சிவஸ்ரீ.பூரண.தியாயகராஜக் குருக்களால் ஸ்ரீ புவனேஸ்வரி அஷ்டகம் என்ற துதிமாலை வெளியிடப்பட்டுள்ளது.

எட்டுப் பாடல்களைக் கொண்ட இந்த நூலில் - அம்மாளின் புராதனம், ஆலய வரலாறு, வழிபடவேண்டியதன் அவசியம், ஆலயங்களை வழிபடும் முறைகள், வழிபடுவதால் ஏற்படும் பலன்கள் என்பவை எல்லாம் பாடல்கள் மூலம் உணர்த்தப்படுகிறது. இந்தப் பாடல்களை 'அஜிகிரி நந்தினி நந்தித மேதினி விஸ்வவினோதினி நந்தநுதே' என்ற ஸ்தோத்திர மெட்டில் படித்தால், கற்சிலையாக இருக்கின்ற இறைவி கட்டாயம் கண்திறந்து கருணை காட்டுவாள். அனைவரும் அம்பிகையின் கருணையைப் பெறவேண்டும் என்பதற்காக சமஸ்கிருத்திலும், தமிழிலும் எழுதப்பட்டுள்ளது. பொருள் தெரியாதவர்களுக்கு அவற்றின் விளக்கமும் இலகுவாக எழுதப்பட்டுள்ளது.

க.பொ.த.உயர்தரப் பிரிவில் சமஸ்கிருதத்தை ஒரு பாடமாகக் கற்பவர்களுக்கு கருத்துகள் அடங்கிய இந்த நூல் ஒரு வரப்பிரசாதமாகும்.

(101)




நூலின் பெயர் :- மாணவர் விடியல்

மலர் :- 13 (ஆடி, ஆவணி 2005)

கல்வியின் தேடல் சிறந்தொரு மாணவர் சமூகத்தை உருவாக்க முடிகிறது. மாணவனாக உருவகிக்கின்றபோது, அதன் பயன் எமது சமூகத்துக்கு பயனுள்ளதாக இருக்க வேண்டும். சிறுவயதிலிருந்து நல்ல வழியில் மாணவர்களைக் கொண்டு செல்லக்கூடிய வகையில், வெளிநாடுகளில் நிறைய சிறுவர் புத்தகங்கள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. ஆனால் இங்கே குறைந்தளவில் சிறுவர் புத்தகங்கள் வெளிவரினும், தரமானதாக இருக்கின்றபோது, மாணவர்களுக்குப் பயனுள்ளதாக இருக்கின்றது.

இதேவேளை மாணவர்கள் தாங்களாகவே எழுதிய கட்டுரைகள், கவிதைகள் பொதுதறிவுவிடயங்கள், ஓவியங்கள் என மாணவர்களாலே எழுதப்பட்டுள்ளதைத் தொகுத்து, புத்தகமாக வெளியிடப்பட்டுள்ளதால் நிறைய மாணவர்களுக்கு தாங்களும் எழுத வேண்டும் என்ற எண்ணத்தைத் தூண்டி விடுகிறது.




நூலின் பெயர்-'இந்து ஒளி' (யாழ் இந்து மாநாடு சிறப்பிதழ்)

(அகில இலங்கை இந்து மாமன்றம் காலாண்டிதழ்)

இதழ் - சித்திரை-ஆனி

தீபம் - 09

சுடர் - 03

சிவத்தொண்டர் அணி பயிற்சிப்பட்டறை நிகழ்வுகளையும், வைத்திய கலாநிதி வேலாயுதம்பிள்ளை நினைவுப் பேருரை நிகழ்வுகளையும் நிழல்படங்களாகத் தாங்கியும், வாழ்த்துச் செய்திகள், ஆசிச்செய்திகளுடனும் சைவத்தின் மகிமைபேசும் கட்டுரைகள் மற்றும் மாமன்றச் செய்திகளுடனும் அகில இலங்கை இந்து மாமன்றம் நடத்திய சிவதொண்டர் அணி பயிற்சிப்பட்டறை நிகழ்வு குறித்த கட்டுரையையும் இந்த நூல் கெண்டுள்ளது.

# கிரீஸ் விமான விபத்து குறித்த புதிய அதிர்ச்சித் தகவல்கள்!



கிரீஸ் நாட்டில் விமானம் மலையில் மோதி நொருங்கிய விபத்துக் குறித்த புதிய தகவல்கள் வெளியாகியுள்ளன. விமானத்தில் ஏற்பட்ட காற்றழுத்த மாறுபாட்டின் காரணமாக அதில் இருந்த 6 விமான ஓட்டிகள் உட்பட 121 பயணிகளும் பனிக்கட்டியாக உறைந்து பலியாகினர்.

விபத்துக்குள்ளான விமானம் சைப்பிரஸ் நாட்டுக்குச் சொந்தமானதாகும். ஏதென்ஸ் நகரில் தரையிறங்கிவிட்டு அந்த விமானம் அங்கிருந்து பராகுவேக்குச் செல்லவிருந்தது. ஏதென்ஸ் போய்ச் சேர்வதற்குள் அது விபத்தில் சிக்கிவிட்டது. இது விமானப் போக்குவரத்து வரலாற்றில் இதுவரை நடக்காத ஒரு வினோதமான விபத்து ஆகும்.

விமானம் ஏதென்ஸ் அருகே வானில் 35 ஆயிரம் அடி உயரத்தில் பறந்து கொண்டிருந்த போது அதனுடனான தகவல் தொடர்பு துண்டிக்கப்பட்டது. இதனால் விமானம் கடத்தப்பட்டதா? அல்லது அதில் ஏதாவது தொழில்நுட்பக் கோளாறு ஏற்பட்டதா? என்பதை தெரிந்துகொள்ள முடியாமல் குழம்பிய கிரீஸ் நாட்டு அதிகாரிகள், விமானத்தைக் கண்காணிப்பதற்காக தங்கள் நாட்டின் 2 போர் விமானங்களை உடனடியாக அனுப்பிவைத்தனர். 2 எப் - 16 ரக போர் விமானங்களில் விரைந்த விமானப்டை வீரர்கள் பயணிகள் விமானத்தை நெருங்கினார்கள். அந்த விமானத்தின் பக்கவாட்டில் சிறிது தொலைவில் பறந்தபடி விமானத்துக்குள் என்ன நடக்கிறது என்று பார்த்தார்கள்.

அப்போது கண்ட காட்சி அவர்களைத் திடுக்கிடவைத்தது. விமானத்தில் விமானிகளின் அறையில் இருந்த ஒரு விமானியை காணவில்லை. துணை விமானி தனது இருக்கையில் சாய்ந்தபடி கிடந்தார். இதனால் ஏதோ விபரீதம் நடந்து இருக்கிறது என்பதை அறிந்த போர் விமான விமானிகள் பயணிகள் விமானத்தை காப்பாற்றுவது சிரமம் என்பதையும் உணர்ந்தனர்.

என்றாலும், விமானிகள் செயற்படாத நிலையிலும் விமானம் கணினி இயக்கத்தின் காரணமாக தொடர்ந்து தானாக பறந்து கொண்டிருந்த சிறிது நேரத்தில் அது கீழ் நோக்கிப் பாய்ந்து சென்று மலையின் மீது மோதி நொருங்கியது.

விமானத்தில் குறிப்பிட்ட அளவில் காற்றமுத்தம் செய்யப்பட்டு நன்கு மூடப்பட்டு இருக்கும். பயணிகளுக்கு தேவையான பிராணவாயுவும் (ஒட்சிசன்) அதற்கு உள்ளேயே இருக்கும்.

ஆனால் விபத்துக்குள்ளான இந்த விமானத்தில் காற்று அழுத்தத்தில் ஏதோ மாறுபாடு ஏற்பட்டு பிராணவாயு விநியோகம் பாதிக்கப்பட்டு இருக்கலாம் என நிபுணர்கள் கருதுகிறார்கள். அதாவது, விமானத்துக்குள் வெளிக்காற்று உள்ளே புகுந்து இருக்க வாய்ப்பு இருப்பதாக கருதப்படுகிறது.

விமானிகள் உயிரிழந்த பிறகும் விமானம் சுமார் 1 மணி நேரம் பறந்திருக்கிறது. கிரீஸ் வான்வெளி எல்லைக்குள் விமானம் நுழைவதற்கு முன்பே விமானிகள் இருவரும் இறந்திருக்கக்கூடும் எனக் கருதப்படுகிறது. இதனால் தான் ஏதென்ஸ் விமான நிலைய கட்டுப்பாட்டறையில் இருந்து விமான ஓட்டிகளுடன் தொடர்பு கொள்ள முயன்றும் முடியவில்லை.



முதலில் விமானிகள் அறைப்பகுதிதான் பாதிக்கப்பட்டிருக்கிறது. அதன்பிறகுதான் பயணிகள் இருந்த பகுதியிலும் காற்றமுத்தம் குறைந்து பிராணவாயு தொடர்பு நின்று போய் இருக்கிறது. இதனால் பயணிகள் மூச்சுத்திணறியும் இருக்கைகளில் இருந்தபடியே பனிக்கட்டியாக உறைந்து பிணமானார்கள்.

விமானம் விபத்துக்குள்ளாவதற்கு சிறிது நேரத்திற்கு முன் அதில் இருந்த பயணி ஒருவர் செல்போனில் எஸ்.எம்.எஸ். மூலம் ஏதென்ஸ் நகரில் உள்ள தனது உறவினருக்கு தகவல் தெரிவித்திருக்கிறார். விமானிகள் அறையில் ஏதோ கோளாறு நடந்திருப்பதாக தான் கருதுவதாகவும், விமானத்திற்குள் நடுங்கவைக்கும் குளிர் பரவி தொடர்ந்து அதிகரித்து வருவதாகவும், மூச்சுத் திணறல்ஏற்படுவதாகவும் அந்த எஸ்.எம்.எஸ்.செய்தியில் குறிப்பிட்டுள்ளார். விமானியின் உடல் நீல நிறத்தில் மாறிவிட்டதாகவும், தாங்கள் குளிரில் உறைந்துகொண்டிருப்பதாகவும் அந்த எஸ்.எம்.எஸ் செய்தியில் குறிப்பிடப்பட்டிருந்தது. தான் சாகப்போவது உறுதி என்பது தெரிந்து விட்டதால் ''போய் வருகிறேன்'' என்றும் எஸ்.எம்.எஸ்.செய்தியில் கடைசியில் கூறி விடைபெற்றிருந்தார்.

விமானியும், துணைவிமானியும் உயிர் இழந்துவிட்டதை அறிந்ததும், விமானத்துக்குள் பெரும் களேபரம் ஏற்பட்டிருக்கிறது. பயணிகள் மரண பயத்தில் அலற, 2 பேர் மட்டும் கடைசி முயற்சியாக விமானிகளின் அறைக்குள் சென்று ஏதேதோ செய்து விபத்திலிருந்து விமானத்தை காப்பாற்ற முயன்றிருப்பதும் தெரியவந்துள்ளது.

இதை அருகில் பறந்து கொண்டிருந்த போர் விமானங்களில் இருந்த விமானிகள் பார்த்திருக்கிறார்கள். விமானியின் அறைக்குள் சென்றவர்கள் விமானத்தின் மற்ற சிப்பந்திகளா அல்லது பயணிகளா என்பது உறுதியாக தெரியவில்லை என்றும் பின்னர் அந்த விமானிகள் தெரிவித்தனர்.

விமானத்தில் பிராணவாயு விநியோகத்தில் பாதிப்பு ஏற்பட்டால் மாற்று வழியில் பிராண்வாயு பெற்றுக்கொள்ளும் வசதியும் உள்ளது. விமானிகள் ஏன் அதற்கு முயற்சி செய்யவில்லை? என்ற சந்தேகமும் எழுந்துள்ளது.

மேலும், விமானிகளுக்கு பிராணவாயு கிடைக்காவிட்டால் அவர்கள் அணிந்து கொள்ள விசேஷ முகமூடியும் உண்டு. அந்த முக மூடியை

## உலக நோக்கு

அவர்கள் பயன்படுத்ததாது ஏன்? என்பதும் பெரிய மர்மமாக இருப்பதாக ஓய்வுபெற்ற இங்கிலாந்து விமானி ஒருவர் கூறினார். இப்படியாக பல சந்தேகங்கள் எழுந்துள்ளன.

### கறுப்பு பெட்டிகள் மீட்பு

விமானம் விழுந்து நொருங்கிய மலையில் பயணிகள் உடல்கள் ஆங்காங்கே உறைந்த நிலையில் கிடந்ததை மீட்புக்குழுவினர் கண்டுபிடித்து மீட்டனர். விமானத்தின் 2 கறுப்புப் பெட்டிகளும் கண்டெடுக்கப்பட்டன. அந்த கறுப்புப் பெட்டிகளை ஆராய்ந்தால் விமானிகள் கடைசியாக பேசிய தகவல்கள் அதில் இடம்பெற்று இருக்கும். அதன் மூலம் விபத்துக்கான முழுக் காரணங்களையும் தெரிந்துகொள்ள முடியுமென்று நிபுணர்கள் கருதுகிறார்கள். விசித்திரமான இந்த விமான விபத்து உலகம் முழுவதும் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

# ஆப்கானில் இரு ஹெலிகள் வீழ்ந்து 17 ஸ்பெயின் படையினர் உயிரிழப்பு

காபூல் —

ஆப்கானில் நேட்டோப் படைகளின் இரண்டு ஹெலிகொப்டர்கள் விபத்துக்குள்ளானதில் 17 ஸ்பானியப் படையினர் உயிரிழந்துள்ளதாக ஆரம்பக்கட்டத் தகவல்கள் தெரிவித்தபோதிலும் நேட்டோ இதனை உறுதிப்படுத்தவில்லை.

ஒரு ஹெலிகொப்டர் ஆப்கானின் தென்பகுதி நகரான ஹேரத்திலும் மற்றையது மேற்குப் பகுதி நகரமொன்றிலும் விபத்துக்குள்ளானதாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்த இரு ஹெலிகளும் விபத்துக்குள்ளான காரணம் எதுவும் தெரியவராத போதிலும் இந்த விபத்துச் சம்பவம் இடம்பெறுவதற்கு சற்று முன்னதாக அந்தப் பகுதிகளில் மணற்புயல் வீசியதாக காபூலில் உள்ள பி.பி.சி. செய்தியாளர் அன்ட்ரூ நோர்த் தெரிவித்தார்.


இந்த ஹெலி விபத்தில் காயமடைந்த ஏனைய படையினர் நேட்டோ படையினரால் மீட்கப்பட்டு வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டனர்.



விபத்துக்குள்ளான ஹெலிகளில் இருந்த படையினர் ஆப்கானில் நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலுக்கான பாதுகாப்புப் பணிகளுக்காகக் கொண்டுவரப்பட்டவர்களென ஆப்கானில் உள்ள சர்வதேசப் படைகளின் பேச்சாளர் தெரிவித்தார்.

# கொலம்பிய பயணிகள் விமானம் வெனிசுலாவில் விபத்துக்குள்ளானது

## பயணிகள் 160 பேரும் பரிதாபமரணம்



கொலம்பியா —

கொலம்பிய பயணிகள் விமானம், வெனிசுலா நாட்டில் விழுந்து விபத்துக்குள்ளானதில் 152 பயணிகள், 8 விமான ஓட்டிகள் உட்பட 160 பேரும் உயிரிழந்துள்ளதாக தகவல்கள் தெரிவித்தன.

152 பயணிகளும், பிரஞ் கரிபியன் தீவுகளைச் சேர்ந்தவர்களெனவும், எட்டு விமான ஓட்டிகளும் கொலம்பியாவைச் சேர்ந்தவர்களெனவும் மேற்கு கரிபியன் விமான நிலைய அதிகாரிகள் தெரிவித்தனர்.

விபத்துக்குள்ளான இந்த விமானம் (MD82) பனாமாவிலிருந்து மற்றனிகியூ நோக்கி பறப்பினை மேற்கொண்டிருந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

விமானத்தின் இயந்திரங்கள் பழுதடைந்துள்ளதால், அவசரமாக அதனைத் தரையிறக்க வேண்டுமென விமான ஓட்டி தெரிவித்ததன் பின்னர், குறித்த விமானத்துடன் எவ்வித தொடர்புமில்லையென விமான நிலைய கட்டுப்பாட்டு அதிகாரிகள் தெரிவித்தனர்.

விமானத்தின் இயந்திரமொன்று பழுதடைந்துள்ளதால், வெனிசுலா வான் வெளியில் பிரவேசித்து அந்த நாட்டின், மராகாபோ விமான நிலையத்தில் தரையிறங்குவதற்கான அனுமதியை விமான ஓட்டி கேட்ட சிறிது நேரத்தில் விமானத்தின் இரண்டாவது இயந்திரமும் பழுதடைந்துவிட்டதாக, அவர் தெரிவித்த கையோடு விமானத்துடனான தொடர்பு துண்டிக்கப்பட்டுவிட்டதாக வெனிசுலாவின் உள்நாட்டு அமைச்சர் ஜேசி சாகோன் தெரிவித்தார்.

இரண்டு இயந்திரங்களும் பழுதடைந்த நிலையில் வெனிசுலாவின் மகிகியூஸ் என்ற மலைப்பகுதியில் குறித்த விமானம் விழுந்து நொருங்கியது. இந்தப் பகுதியில் பாரிய வெடிச் சத்தமொன்றைத் தாம் கேட்டதாக அப்பகுதி மக்



கள் தெரிவித்ததாக, வெனிசுலா விமான போக்குவரத்து அதிகாரி பிரான்சிஸ்கோ பாஸ் தெரிவித்தார்.

விமானம் விபத்துக்குள்ளான பகுதியில் கடும்மழை மற்றும் மோசமான காலநிலை நிலவி வருவதனால் மீட்புப்பணிகள் தாமதமடைவதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

# மோசமான நிலையை நோக்கி..

ஏற்படுத்தல் என எல்லா விடயங்களையும் அரசாங்கம் தட்டிக்கழித்துவரும் நிலையில் - மக்கள் மத்தியில் விரக்தி நிலை தோன்றியுள்ளதுடன் நெருக்கடி நிலையும் ஏற்பட்டிருக்கிறது.

எவ்வளவு தூரம் இது முன்னேற்றம் அடையுமென்பது எங்களுக்குத் தெரியாதநிலைதான் இருக்கிறது.

மக்களின் மனிதாபிமானப் பிரச்சினைகள், அவர்கள் எதிர்கொள்ளும் நெருக்கடிகள், யுத்த நிறுத்த உடன்பாடு நெருக்கடிக்குள்ளாகிக் கொண்டிருப்பது போன்ற விடயங்கள் உடனடியாக சீர் செய்யப்படவேண்டும்.

இலங்கை அரசாங்கமும், படைத்தரப்பும் அர்ப்பணிப்போடு செயற்படும் சூழல் வராவிட்டால் நிச்சயமாக இந்தச் சூழல் சரியாகுமென நாங்கள் நம்பவில்லை.

*லக்ஷ்மன் கதிர்காமரின் மரணம் சமாதான வழிமுறைகளுக்குப் பங்கம் ஏற்படுத்துமா?*

இதுபெரிய தாக்கத்தை ஏற்படுத்தும் என்று நாங்கள் நினைக்கவில்லை. வெளிவிவகார அமைச்சரின் கொலை சிறிலங்காவில்தான் நடந்திருக்கிறது.

எங்களைப் பொறுத்தவரை இது ஒரு உள் விவகாரம். இது ஆழமாக ஆராயப்படவேண்டிய விடயம். ஏனெனில், இலங்கை அரசியல் தலைமைத்துவத்திற்கான போட்டிகள், முரண்பாடுகள் அண்மைக் காலமாகத் தீவிரமடைந்து வருகிறது இதன் வெளிப்பாடாக இருக்கலாம். மிக உயர்ந்த பாதுகாப்புக்குட்பட்டிருந்த ஒருவர் மிக இலகுவாகக் கொலை செய்யப்பட்டிருக்கிறார்.

இதெல்லாம் அங்குள்ள உள்ளகப் பாதுகாப்பு நிலைப்பாடுகளிலும், அவர்களின் முரண்பாடுகளிலும் அவர்களின் அரசியல் மோதல்களுக்குப் பின்னால் உள்ள உண்மை நிலையைக் கண்டறிய வேண்டிய நிலைப்பாடு இருக்கிறது.

இதைக் கொண்டு வந்துஇரண்டு தரப்புக்கும் பிரச்சினையாக்கத் தேவையில்லை. இது படையினருக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான யுத்த நிறுத்த உடன்பாடு. இங்கு இரண்டு தரப்புகளுக்கும் இடையிலான மீறலல்ல இது.

அங்கே நடந்த சம்பவத்துக்கு அவர்கள் உண்மை நிலையைக் கண்டறிய வேண்டும். கொலையாளிகளைக் கண்டறிய வேண்டும். கொலைகளின் பின்னணியைக் கண்டறிய வேண்டிய தேவை அவர்களுக்கிருக்கிறது.

இதைக் கொண்டுவந்து பொது மக்களின் பிரச்சினைகளோடு அல்லது போர் நிறுத்த உடன்பாட்டு முயற்சிகளோடு இணைத்துப் பார்க்க வேண்டியது அவசியமற்றது.

*லக்ஷ்மன் கதிர்காமரின் கொலையுடன் உங்களுக்குச் சம்பந்தமில்லையென்று கூறினாலும், உங்களுடைய மறுப்பினை சர்வதேச நாடு கள் ஏற்றுக்கொள்ளும் நிலையில் இருக்கிறதா?*

இந்தக் கொலைக்குக் கொலையாளிகளின் பின்னணி என்ன என்பது இனி வருகின்ற விசாரணைகள் மூலம் வெளிப்படும். கொழும்பிலுள்ள உயர் பாதுகாப்பு வலயத்தில் உள்ள முழுக் கண்காணிப்புக்குட்பட்ட அவர்களின் கோட்டைக்குள்ளேயே நடந்திருக்கிறது. ஆகவே, இதன் உண்மை நிலை, கொலையாளிகள் பற்றியும், கொலையின் பின்னணி பற்றியும் கண்டறிய வேண்டியது - அங்கு சட்டம் - ஒழுங்கைப் பேணுகின்ற அமைப்புக்களின் பொறுப்பு.

இதனை அரசு தட்டிக்கழிக்க முடியாது. கொலை நடந்த உடனேயே புலி கள் மீது குற்றஞ் சுமத்திவிட்டு கொலையாளிகளை, கொலையின் நோக்கங்களைத் தட்டிக்கழிப்பது ஏற்றுக் கொள்ளக்கூடியதல்ல. உண்மை நிலைகளைக் கண்டறிந்து நிச்சயமாக அவர்கள் எமது நிலைப்பாட்டை அறியலாம். சம்பவங்கள் நடந்தால் அதன் உண்மை நிலைகளைக் கண்டறிந்து ஆதரங்களோடு நிரூபிக்கப்பட்ட பின்புதான் ஒருவர் மீது குற்றம் சுமத்த முடியும். அது தான் யதார்த்தமானது.

சந்தேகத்தின் அடிப்படையில் விடுதலைப் புலிகள்மீது உடனடியாக குற்றம் சுமத்துவதும் அவர்களின் மீது கண்டனங்களைத் தெரிவிப்பது எந்தவித அர்த்தமுமில்லை. கதிர்காமரைப் பொறுத்தளவில் தமிழ் மக்களால் வெறுக்கப்பட்டவர் என்பது உண்மை. இதை வைத்துக் கொண்டு புலிகள்மீது குற்றம் சுமத்துகிறது இலங்கை அரசாங்கம்.

இதனால், சர்வதேச சமூகத்துக்கு ஒரு குழப்பம் ஏற்படலாம். நாங்கள் தெளிவாக எங்களின் நிலைப்பாட்டை வெளிப்படுத்தியிருக்கிறோம். இது ஒரு சமாதானச் சூழல். அமைதி முயற்சிகளை நாங்கள் முன்னெடுக்கின்ற சூழல். அதனால், நாங்கள் தாக்குதல் நடத்தவேண்டிய தேவையில்லை. இதற்கான ஒரு சூழல் இல்லை. அது சாத்தியப்பாடானதுமல்ல.

இதனை எந்த அளவுக்கு சர்வதேச சமூகம் புரிந்து கொள்ளும். இப்பொழுது ஜனாதிபதிக்கான போட்டி, பிரதமருக்கான உள்ளகப் பிரச்சினைகளின் பின்னணியில் அங்கேயுள்ள ஆயுதக் குழுக்கள், பாதாளக்குழுக்கள் பல்வேறு பிரச்சினைகளை அங்கு உருவாக்கி இருக்கின்றனர். இதைச் சர்வதேசம் புரிந்துகொள்ளும் என்று நாங்கள் நம்புகிறோமென அவர் மேலும் தெரிவித்தார்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# சமாதான முன்னெடுப்புக்கள்
# தவறான பாதையில் சென்றதாலேயே
# காதிர்காமரின் படுகொலை நடந்தது!

## ஐ.தே.கட்சி குற்றச்சாட்டு

கொழும்பு —

தவறான பாதையில் சமாதான வழிமுறைகள் முன்னெடுத்துச் செல்லப்பட்டதன் விளைவாகவே அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் கொலை இடம்பெற்றிருப்பதாக ஐக்கிய தேசியக் கட்சி குற்றஞ்சாட்டியுள்ளது.

எதிர்க்கட்சித்தலைவர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே ஐ.தே. கவின் இந்தக் கருத்தை நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசும்போது -

இனப்பிரச்சினை தொடர்பாக ஐ.தே.கவின் நிலைப்பாட்டில் எந்த மாற்றமும் கிடையாது.

இந்தப் பிரச்சினைக்கான ஒரே ஒரு தீர்வு அரசியல் அணுகுமுறையாகும்.

தற்போதைய அரசியல் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு விதலைப் புலிகள் இயக்கத்தோடு மீண் டும் சமாதானப் பேச்சுகளை ஆரம்பிக்க வேண்டும்.

விடுதலைப்புலிகளை பேச்சு வார்த்தைக்குக் கொண்டு வருவதன் மூலம் குழப்பமான நிலைமையை சுலபமாக்க முடியும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## கற்கோவளத்தில் சுடுமண் கிணறு!



வடமராட்சி —

கற்கோவளம் புனிதநகரில் வீடுகட்டுவதற்கு அத்திவாரம் வெட்டிய வேளை சுடுமண் கிணறு ஒன்று கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிரந்தர வீடு தொண்டு நிறுவனங்களால் அமைக்கப்பட்டு வருகிறது.

நேற்று வீடு கட்டுவதற்காக அத்திவாரம் வெட்டியவேளை சுடுமண் கிணறு இருப்பதை தொழிலாளர்கள் கண்டுபிடித்தனர்.

இது தொடர்பாக உடனடியாக யாழ்.பல்கலைக்கழக தொல்பொருள் ஆய்வாளர்களுக்கு அறிவிக்கப்பட்டதையடுத்து இன்று தொல்பொருள் ஆய்வாளர் குழுவொன்று புனித நகருக்கு செல்லவுள்ளதாகத் தெரியவருகிறது. (14)

## நீர்ப் பாத்திரத்துள் விழுந்து 11 வயது சிறுவன் மரணம்!

நீர் நிறைந்த பாத்திரம் ஒன்றினுள் விழுந்து, சிறுவன் ஒருவன் பரிதாபகரமாக மரணமடைந்தான்.

நேற்றுக்காலை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தின்போது - தெய்வேந்திரம் அற்புதன் (வயது 11) என்ற சிறுவனே பரிதாபகரமாக மரணமானார்.

நீர் நிறைந்த பாத்திரம் ஒன்றினுள் விளையாடிக்கொண்டிருந்தபோது திடீரென வலிப்பு ஏற்பட்டு நீரினுள் வீழ்ந்ததில் மூச்சுத் திணறல் ஏற்பட்டே மேற்படி சிறுவன் பரிதாபகரமாக மரணமடைந்தார்.

உயிரிழந்த சிறுவனின் சடலம் வைத்திய பரிசோதனையின் பின் உறவினரிடம் கையளிக்கப்பட்டது.

## கதிர்காமரின் இறுதி...

அவர் மேலும் தெரிவித்ததாவது -

எமக்கு கிடைத்த தகவலின்படி பெருமளவான விடுதலைப்புலிகள் அண்மைய வருடங்களாக கொழும்பில் ஊடுருவியுள்ளனர். இவர்களைக் கண்டுபிடிப்பதற்கும் அவர்கள் பதுக்கி வைத்துள்ள ஆயு தங்களை கண்டுபிடிப்பதற்கும் பொலிஸாருடன் இணைந்து படையினர் தற்போது தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர்.

மீண்டும் நடமாடும் வீதித் தடைகள் போடப்பட்டு சோதனை நடத்தப்படும் அத்துடன் திடீர் சோதனைச் சாவடிகளும் அமைக்கப்பட்டு சந்தேக நபர்கள் எனக் கருதப்படுவோர் சோதனையிடப்படுவர். இந்தத் தேடுதல் நடவடிக்கைகள் எமது புலனாய்வுத் தகவல்கள் மற்றும் பொது மக்களின் தகவல்கள் மூலமே மேற்கொள்ளப்படும்

வீதிச்சோதனைகளை ஏற்படுத்தி சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டாலும் 2002 ஆம் ஆண்டு போர் நிறுத்த ஒப்பந்தம் ஏற்படுத்தப்படுவதற்கு முன்னரான நிலைமை போன்று தற்போது ஏற்படுத்தப்பட மாட்டாதெனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை இந்த தேடுதல் நடவடிக்கை குறித்து பிரதிப் பொலிஸ் மா அதிபர் பூஜிதஜயசுந்தர தெரிவிக்கையில் -

அமைச்சர் கதிர்காமரின் இறுதிக் கிரியைகள் இடம்பெற்று முடிந்த பின்னர் இடைவிடாத தேடுதல் நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன. முன்னர் எமது தேடுதல் நடவடிக்கைகள் ஓய்ந்திருந்தமைக்குக் காரணம் அமைச்சர் கதிர்காமரின் இறுதி நிகழ்வுகளில் கலந்து கொள்ளவந்த வெளிநாட்டுப் பிரதிநிதிகளுக்கு பூரண பாதுகாப்பை வழங்கி வந்தமையாகும்.

அமைச்சர் கதிர்காமரை கொல்ல பயன்படுத்தப்பட்ட துப்பாக்கி இது வரை கண்டுபிடிக்கப்படவில்லை. இந்தக் கொலையுடன் சம்பந்தப்பட்டவர்களென இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை. தேடுதல் நடவடிக்கையின் போது எத்தனை பேர் கைது செய்யப்பட்டனர் என்ற விபரத்தை தெரிவிக்க முடியாது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## இதுவரை 51பேர் கைது!

கொழும்பு —

வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் கொலை தொடர்பாக - கடந்த நான்கு நாட்களில் மட்டும் 51 பேர் கைதுசெய்யப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

கைதுசெய்யப்பட்ட 51 பேரில் 8 பேர் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். 18 பேர் காசுப்பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர். மேலும் 8 பேர் தொடர்ந்தும் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

## ரேலங்கியையும் கணவரையும் றியசீலனே சுட்டுக் கொன்றார்!

### இணையத்தளம் தகவல்

கொழும்பில் கடந்த வெள்ளிக்கிழமை பிரபல வானொலி தொலைக்காட்சி அறிவிப்பாளர் ரேலங்கி செல்வராஜா மற்றும் அவரது கணவர் ஆகியோரை கருணா குழுவைச் சேர்ந்த றியசீலன் என்பவரே சுட்டதாக இணையத்தளம் ஒன்று செய்தி வெளி யிட்டிருக்கிறது.

விடுதலைப் புலிகளுடன் இரகசியத் தொடர்புகளை வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் இவர்கள் சுட்டுக்கொல்லப்பட்டதாகவும் இந்தச் சம்பவத்துடன் வெளிநாட்டிலிருக்கும் தமிழ் வர்த்தகர் ஒருவரும் தொடர்புபட்டிருப்பதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

## லக்ஷ்மன்...

சமாதான முயற்சிகள் தொடர்பாக சந்தித்து கலந்துரையாடிய போதே இவ்வாறு தெரிவிக்கப்பட்டதாக அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுடனும் நோர்வே வெளியுறவு அமைச்சர் தலைமையிலான குழுவினர் சந்திப்பொன்றை நடத்தியதாக கொழும்பிலுள்ள நோர்வே தூதரகத்தின் பேச்சாளர் றொம் நப்ஸ்கொக் தெரிவித்தார். எனினும், அவர் இந்தச் சந்திப்பின் விபரங்களை வெளியிட மறுத்துவிட்டார்.

## இராணுவ...

சிறிது நேரம் பயணிகள் எவரும் மேற்படி வீதியூடாக போக்கு வரத்தில் ஈடுபடமுடியவில்லை.

இதன் காரணமாக அந்தப் பகுதியில் பதற்ற நிலை தோன்றியதுடன் மாலையில் மீண்டும் நிலைமை வழமைக்குத் திரும்பியது.

## அவசரகால...

இந்த விசேட கூட்டத்தில் ஜனாதிபதி சந்திரிகா கடந்த 13 ஆம் திகதி அதிகாலை முதல் பிரகடனம் செய்த அவசரகாலச் சட்டத்துக்கு நாடாளுமன்றத்தில் அங்கீகாரம் கோரப்படவுள்ளதுடன் -

அடுத்த ஒரு மாத காலத்துக்கு அவசரகாலச் சட்டம் நடைமுறையில் இருப்பதற்கான அங்கீகாரத்தையும் கோரவுள்ளார்.

இது தொடர்பாக சபை முதல்வரும், அரச ஊடகப் பேச்சாளருமான அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா வெளியிட்ட அறிக்கையில் -

மக்கள் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் கீழ் ஜனாதிபதிக்குள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி கடந்த 13 ஆம் திகதி அவசரகால நிலைமையைப் பிரகடனப்படுத்தியமை குறித்து நாடாளுமன்றுக்கு விளக்கமளிப்பதற்காகவே இந்தக் கூட்டம் கூட்டப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பாதுகாப்பு நிலைமைகள் குறித்து முக்கிய முடிவுகள் எடுக்கவேண்டும்!

### திலக் ரணவிராஜா

கொழும்பு —

நாட்டின் பாதுகாப்புத் தொடர்பாக - அரசியல் நிகழ்ச்சி நிரலுக்கு அப்பால் தேசிய ரீதியாக பொறுப்புக்களை உணர்ந்து முடிவுகளை எடுக்க வேண்டிய காலம் வந்துள்ளதாக - பொதுமக்கள் பாதுகாப்பு சட்டம் ஒழுங்கு அமைச்சின் செயலாளர் திலக் ரணவிராஜா தெரிவித்தார்.

வெளிவிவகார அமைச்சரின் மறைவின் பின்னர் இதற்கான அவசியம் அதிகரித்திருக்கிறது. நாட்டின் பாதுகாப்பு சம்பந்தமான நடவடிக்கைகளை எடுக்கையில் அரசியல் வாதிகளிடமிருந்தும், பல்வேறு அமைப்புக்களிடமிருந்தும் பாதுகாப்புப் பிரிவின் மீது விடுக்கப்படும் அழுத்தங்களைக் குறைப்பதற்கு அரசாங்கம் எதிர்காலத்தில் கடும் நடவடிக்கைகளை எடுக்கவேண்டும்.

விடுதலைப் புலிகளை கைது செய்கையிலும், தேடுதல் நடவடிக்கைளின்போதும் பாதுகாப்புப் பிரிவினர் மீது பலவிதமான அழுத்தங்கள் விடுக்கப்படுகிறது.

இதனால் தங்கள் கடமைகளை நிறை வேற்றுவதில் தடங்கல்கள் ஏற்படுவதாக அவர்கள் கூறுவதை ஏற்றுக்கொள்ள வேண்டும். இது சம்பந்தமாக ஜனாதிபதியும், பிரதிப் பாதுகாப்பு அமைச்சரும் கவனம் செலுத்தியுள்ளனர். எனவே, இது சம்பந்தமாக அரசாங்கம் விரை வில் கடும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமென தாம் நம்புவதாகவும் அவர் மேலும் தெரிவித் தார்.

## கருணா...

வடிவேல் சசிகரன், பத்மராஜா ஆகிய இளைஞர்களுடன் வீடு திரும்பிக்கொண்டிருந்தபோதே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது.

இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பாக கரலகன்வில பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## இரண்டு...

காயமடைந்த இருவரும் மட்டக்களப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைபெற்று வருகின்றனர்.

## சினைப்பர் தாக்குதலில்...

எச்.கே.ஏ.ஹென்தெனிய(வயது30) என்பவரே கொல்லப்பட்டார்.

படுகாயமடைந்த இவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டபோதிலும் 12.30 மணியளவில் உயிரிழந்ததாகக் கூறப்படுகிறது. இவர் தலைக்கவசம் அணிந்திருந்ததாகவும் - எனினும், முகத்திற்கே குறிபார்த்து தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.


இந்தத் தாக்குதலில் உயிரிழந்த லான்ஸ் கோப்ரல் 12 வருடங்களாக இராணுவத்தில் பணியாற்றியவர் என்றும், சத்ஜெய, ர்ணகோச உள்ளிட்ட படைநடவடிக்கையில் பங்கேற்றவர் என்றும் தெரியவருகிறது.

அத்துடன், இவர் விசேட நடவடிக்கை பிளாட்டுன் கற்கை நெறி, வான்வழி நகர்வு மற்றும் பற்றாலியன் கற்கை நெறிகளில் விசேட பயிற்சி பெற்றவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்தத் தாக்குதலையடுத்து தொட்டுபொல என்ற இடத்திலிருக்கும் இராணுவ காவலரணில் பணியாற்றும் மற்றொரு படைச்சிப்பாய் மீதும் சினைப்பர் தாக்குதல் நடத்தப்பட்ட போதிலும் அவர் தப்பிவிட்டதாகக் கூறப்படுகிறது. இந்த ரவை காவலரணிலுள்ள பதுங்கு குழியின் சுவரில் பட்டதாகவும் இராணுவத்தரப்பு தகவல்கள் தெரிவித்தன.

## மரண அறிவித்தல்

### பொன்னையா கிருபானந்ததேவன்



கரவெட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட பொன்னையா கிருபானந்த தேவன் (குஞ்சு,சுவிஸ்) அவர்கள் சுவிஸில் காலமாகிவிட்டார்.

அன்னார் பொன்னையா – மீனாட்சி தம்பதிகளின் அன்பு மகனும், இரத்தினேஸ்வரியின் அன்புக் கணவரும், முரளிதரன், மீரா, றேகா ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜெயக்குமார், ஜெனித்தா ஆகியோரின் அன்பு மாமனாரும், ஜெயபிரவின், அபிஷா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கலட்டி வீதி,
கரணவாய் தெற்கு,
கரணவாய்.

தகவல்:
குடும்பத்தினர்.

(2010)

தரமான அறுசுவை உணவுகளுடனும் பாண்,
Pasty, சான்விச், மற்றும் ஐஸ்கிறிம் வகைகளுடனும்
உங்களை நாடி
Mango'S
வெகு விரைவில்
C/4368

கணக்காளர் பதவி வெற்றிடம்

யாழ்ப்பாணத்தில் இயங்கும் பிரபலம் வாய்ந்த நிறுவனம் ஒன்றுக்கு மேற்படி பதவிக்குப் பொருத்தமான கணக்காளர் தேவை.

- வயதெல்லை :- 35 இற்கு மேற்பட்டவர்
- முன் அனுபவம் விரும்பத்தக்கது

தகைமையுடையோர் தமது சுயவிபர விண்ணப்பத்துடன் கல்விச் சான்றிதழ்கள், அண்மையில் பெற்ற இரு நற்சான்றிதழ்கள் ஆகியவற்றின் போட்டோ பிரதிகளை இணைத்து 25.08.2005 க்கு முன்பதாக அனுப்பிவைக்கவும். சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

விளம்பர இல: எப் / 001
267, நமது ஈழநாடு, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை இல.267 நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 17.08.2005 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.